29th October 1958] [Mr. Speaker.]

(2) The Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Estates Land (Reduction of Rent) and Estates (Supplementary) (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 35 of 1958):

(3) The Madras Betting Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 30 of 1958).

On the 1st, 3rd and 4th November 1958, the Madras State Electricity Board Budget will be taken up for discussion. The House is likely to sit on the 5th November 1958 also, the agenda for which will be announced later in consultation with the Business Advisory Committee. It has been agreed that from tomorrow the House will sit from 9 a.m. to 1-30 p.m. every day. To-day (29th October 1958) we will sit from 11 a.m. to 1 p.m. and 3 to 5 p.m.

SRI S. M. ANNAMALAI : கிளாஸ் பை கிளாஸ் டிஸ்கஷன், எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : 'மோஷன் மூவ்' செய்த பிறகு தானே சொல்ல முடியும் !

VI.—GOVERNMENT MOTION *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—that item (3) of the Agenda, namely, the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958) be taken up before items 1 and 2."

The motion was put and carried.

VII.—GOVERNMENT BILL.

THE TIRUCHIRAPPALLI KAIAERUVARAM AND MATTUVARAM BILL, 1958 (L.A. BILL NO. 25 OF 1958). 12-10 p.m.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, I beg to move—

"That the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958) be taken into consideration."

The Madras High Court has held that kaieruvaramdars and mattuvaramdars in Tiruchirappalli district engaged by landlords to work on land for remuneration by a share in the crop on such land are not "cultivating tenants" within the meaning of section 2 (*a*) of the Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955). The definition of "cultivating tenant" in the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956) is similar to that in Madras Act XXV of 1955. It was considered that these varamdars (kaiaeruvaramdars and mattuvaramdars) in the Tiruchirappalli district should get the benefits which the cultivating tenants were getting under these

[Sri M. A. Manickavelu] [29th October 1958

two enactments. With a view to achieve this object an Ordinance called the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Ordinance, 1958 Madras (Madras Ordinance I of 1958) was promulgated on 5th January 1958. In February 1958, a Bill to replace the Ordinance was introduced in the Legislative Assembly and was referred to a Joint Select Committee.

The Joint Select Committee considered the Bill and suggested that the Bill might be dropped and a new Bill introduced for giving effect to the following purposes :—

(1) The kaiaeruvaramdars be treated on a par with ' Pannaiyal's and their rights protected as in the Tanjore Pannaiyal Protection Act, 1952 (Madras Act XIV of 1952).

(2) The small landowners owning three acres and less and without any other means of livelihood and who do not pay sales tax or income tax be completely exempted from the provisions of the Act.

(3) In the case of landholders owning up to 10 acres, they should be entitled to resume land up to 3 acres for personal cultivation and lands not so resumed be pooled and divided among the mattuvaramdars in case the interests of any of them are prejudicially affected.

(4) In the case of those who own more than 10 acres, mattuvaramdars be raised to the status of cultivating tenants with the rights and liabilities of cultivating tenants under the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956.

(5) Retrospective effect be given to the proposed legislation from 1st January 1957.

(6) The terms kaiaeruvaramdar and mattuvaramdar be defined so as to bring out their status clearly.

(7) The proposed legislation be made applicable to those villages in the Tiruchirappalli district where this peculiar tenure is said to be in force.

The Bill was accordingly dropped. The Ordinance also lapsed. The present Bill gives effect to the suggestions of the Joint Select Committee with certain slight modifications. In the matter of sharing of crops under the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, it has been felt that retrospective effect will lead to difficulties and, therefore, it is proposed to give effect from the date of the commencement of the proposed Act. But as regards protection under the Madras Cultivating Tenants Protection Act, 1955, provision has been made for reopening cases disposed of on or after the 1st January 1957, and before the commencement of the proposed Act.

29th October 1958] [Sri M. A. Manickavelu]

I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved—

"That the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958) be taken into consideration."

Before I allow further discussion, I wish to point out that the question raised by Sri S. M. Annamalai is pertinent. I would like to know from the Hon. Minister for Revenue how long he will take for replying to the debate at the first reading stage. Will 15 minutes be sufficient?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, 15 minutes will be sufficient.

MR. SPEAKER : In that case, we can have general discussion on the Bill till 3-30 p.m., and the Hon. Minister may reply from 3-30 to 3-45 p.m. From 3-45 to 5 p.m., the House could consider the Bill clause by clause. If, however, the House thinks that one hour will be enough for the clause by clause consideration, the general discussion could go on till 3-45 p.m. and the Hon. Minister might reply from 3-45 to 4 p.m. and we can have clause by clause consideration from 4 to 5 p.m. I take it that that is the sense of the House. If we stick up to this timing, I think we can finish the Bill tc-day.

* SRI N. K. PALANISAMI : : கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே இந்த மசோதாவை இந்தச் சபையில் கொண்டு வந்து, அதன் பிறகு அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு அந்தப் பொறுக்குக் கமிட்டியில் ஏற்பட்ட ஒரு எதிர்ப்பின் காரணமாக இதைக் கைவிட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் சர்க்காருக்கு ஏற்பட்டது. அங்குள்ள விவசாயிகளுக்குள் ஒரு சிறிய உரிமையைக் காப்பதற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டமே தேவையில்லை. அப்படி ஒன்றும் ஒரு பெரிய உரிமையை அவர்கள் அடைந்து விடவில்லை. அங்குள்ள விவசாயிகள் ஏற்கெனவே அனுபவித்து வரக்கூடிய ஒரு உரிமையைக் கொடுக்கக்கூட மறுப்பதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு உரிமையைக் கூட மறுப்பது என்றால் பாக்கி இருக்கக் கூடிய சட்டங்கள் எந்த அடிப்படையில் இருக்கும் என்று நாம் சொல்ல முடியாது. ஆகவே இந்த மசோதாவைக் கொண்டுவந்த போதிலும்கூட இதனால் 100-க்கு பத்துப் பேர்களுக்குத்தான் இந்தச் சட்டத்தினால், பிரயோசனம் ஏற்படுமே தவிர பாக்கி இருக்கக்கூடிய 100-க்கு 90 பேர்களுக்கு இந்தச் சட்டத்தினால் பிரயோசனம் கிடையாது. கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக ஆயிரக் கணக்கான விவசாயிகள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு அப்படி வெளியேற்றியது நியாயம் எனற முறையில் இந்தச் சட்டம் அவர்களுக்கு சொல்லுகிறது. அது மட்டுமல்ல, இப்பொழுது இருக்கக்கூடிய மசோதாவிலுள்ள ஒவ்வொரு கிளாசை எடுத்துக்கொண்டாலும் மேலும் மேலும் அவர்களை வெளியேற்றுவதற்கு வகை செய்கிறது. அப்படிப்பட்ட ஒரு வழி நிலச் சொந்தக்காரர்களுக்கு இருக்கிறது. கையேறு வாரம் மாட்டுவாரம்தாரர்களை, அவர்கள் சாதாரணமாக சுதந்திரமாக இருந்தவர்களைப் பண்ணை அடிமைகளாக இந்த மசோதாவின் மூலமாக மாற்றப்படுகிறார்கள்.

[Sri N. K. Palanisami] [29th October 1958

அது மட்டுமல்ல, ஒரு நிலச்சுவாந்தார் கையேறு, மாட்டுவாரம் தார்களை " misconduct and neglect of duty " என்ற முறையில் அவர்கள் ஆழமாக உழவில்லை என்றும் சொல்லி அவர்களை வேலை யிலிருந்து நீக்குவதற்கு முடியும். அதற்கு இந்த மசோதாவில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் 10 ஏக்கருக்குக் குறைவாக இருக்கக் கூடியவர்களுக்குத்தான் இந்தச் சட்டம் செல்லும் என்றும் சொல்லப்படுகிறது. ஒருவருக்கு 15 ஏக்கர் இருக்கலாம், அல்லது 16 ஏக்கர் இருக்கலாம். அந்த அடிப்படையில் கையேறுவாரம்தார், மாட்டு வாரம்தார்களை நிலச் சொந்தக்காரர்கள் நீக்க வேண்டுமென்று நினைத்தால் தன்னிடமுள்ள நிலத்தில் சுமார் ஆறு ஏக்கர் நிலத்தை மற்றவர்களுக்கு எழுதி வைத்துவிட்டு கையேறு, மாட்டு வாரம்தார்களை நீக்குவதற்கு வழி இருக்கிறது, இந்தச் சட்டத்தின் மூலமாக.

இன்னும் நிலச் சொந்தக்காரருக்கும் கையேறுவாரம்தார் மாட்டு வாரம்தார்களுக்கும் ஏதாவது தகராறுகள் ஏற்பட்டால் யார் வேண்டு மானாலும் கோர்ட்டுக்குப் போகலாம் என்று இருக்கிறது. ஏதாவது தகராறு செய்துவிட்டு கோர்ட்டுக்குப் போவதற்கு நிலச்சுவாந்தாருக்கு சகல வசதி களும் இருக்கின்றன. ஆகவே ஏதாவது தகராறு ஏற்பட்டால் நிலச் சுவாந்தார்தான் கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்ற முறையில் இந்த மசோதாவைத் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் பத்து ஏக்கருக்குள் இருக்கக்கூடிய நிலச்சுவாந்தார் மூன்று ஏக்கர் நிலத்தை தன்னுடைய சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியும். அதன் காரணமாக அவரிடம் இருக்கக்கூடிய கையேறு வாரம் மாட்டு வாரம்தார்களை நீக்குவதற்கு எந்தவிதமான தடங்கலும் இல்லை என்ற முறையில் இப்பொழுதுள்ள சட்டம் இருக்கிறது. இன்னும் எந்தப் பகுதி பூமியாவது நல்ல பூமியாக இருந்தால் அந்தப் பகுதியை நிலச் சுவாந்தார் எடுத்துக்கொள்ள முடியும். அதன் காரணமாக மேலும் வெளியேற்றங்கள்தான் ஏற்படும். இன்னும் இரண்டு அல்லது மூன்று பேர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு அங்கே கையேறு, மாட்டு வாரம் தார்கள் இருந்தால் அவர்கள் பழைய முறையில் குறைவாக குத்தகையைக் கொடுத்தால் சட்ட பூர்வமாக அவர்களை அந்தப் பகுதியிலிருந்து வெளி யேற்றிவிட வேண்டுமென்ற முறையில் சொல்வதற்கும் இதில் இடம் இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு சந்தர்ப்பத்தைப் பார்த்தாலும் கையேறு, மாட்டுவாரம்தார்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக அவர்களை வெளியேற்றுவதற்கு நிலச்சுவாந்தார்களுக்கு வகை செய்கிறது.

அது மட்டுமல்ல, அவர்களுக்குக் கூலி 45 பட்டணம் படி தானியம் என்று இருக்கிறது. மற்றும் நாலு மாத வேலைதான் என்றும் இருக் கிறது. சாதாரணமாக நாற்றங்காலுக்கு ஒரு மாத டயம் வேண்டும். பரம்படிக்க, சரியானபடி பூமியை அமைக்க பக்குவமாக பூமியை வைத்துக் கொள்ள ஒரு மாதமாகும். நாற்றங்காலுக்குக் குறைந்தது ஒரு மாத காலமாகும். இன்னும் பயிர் மூன்று மாதங்களுக்கு இருக்கும். அதற்குப் பிறகு அறுவடை வேறு இருக்கிறது. அறுவடைக்குப் பிறகும் ஒரு மாதம் வேலை இருக்கிறது. அதன் பிறகு சம்பா நடவு. இவைகளுக்கு குறைந்தது ஏழு மாதம் ஆகும். சுமார் ஏழு மாதத்திற்கு அவர்களுக்கு வேலை இருக்கிறது. ஆனால் இங்கே கொடுத்திருப்பது நான்கு மாதங்கள் தான். அதனால் இந்த நான்கு மாதங்களுக்குப் பிறகு ஏதாவது கூலியாட்களை வைத்துக்கொள்வதற்கு இந்த மசோதா வகை செய்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் இந்த மசோதாவில் அநேகம் இருக்கின்றன. ஆகவே இதைச் சரியானபடி அமைத்து நல்ல முறையில் கொண்டுவர வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய திருத்தங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

29th October 1958]

MR. SPEAKER : I would request those Members who are anxious to speak on the Bill, to kindly give me their names. There is no point in asking for time when no time is available and in having no speakers when time is available. For instance Sri Kalyanasundaram wants to speak for 40 minutes and Sri Lazar also wants to speak for 40 minutes. No Member has yet given his name to me. I am prepared to give as much time as possible to them. But, other Members should not stand up later on and say that they have not been given a chance to speak. That is why I say that those who wish to speak may give their names to me.

* **SRI S. M. ANNAMALAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 12–20 p.m. நம்முடைய மாநிலத்திலே மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்கள் விவசாயிகள். அவர்களைப்பற்றிக் கொண்டுவரும் சட்டங்கள் அனைத்தும் உண்மையிலேயே அவர்களுக்கு ஏமாற்றம் தரக்கூடியவகையில்தான் இருக்கின்றனவேயொழிய, அவர்களுக்கு ஒரு நல்ல முறையை ஏற்படுத்திக்கொடுக்க இந்தச் சர்க்காரால் முடியவில்லை.

இந்தச் சட்டமானது முதன் முதலில் அவசரச் சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. பிறகு, செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு, எந்தவிதக் காரணத்தினாலோ அது கைவிடப்பட்டது. மாட்டு வாரம்தாரர்களையும், கை ஏர் வாரம்தாரர்களையும் தனித்தனியாகப் பிரித்து, மாட்டு வாரம்தாரர்களை வாரம்தாரர்களாகவும், கை ஏர் வாரம்தாரர்களை பண்ணையாட்களாகவும் கொண்டுவரவேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டம் கைவிடப்பட்டது. அந்தச் சட்டசபைக் கூட்டத்திலேயே அதைக் கொண்டுவருவதாகச் சொல்லிய சர்க்கார் ஏறத்தாழ எட்டு மாதங்களுக்குப் பின் இப்பொழுதுதான் கொண்டு வருகிறார்கள். ஏறத்தாழ எட்டு மாதங்களுக்குள், நிலச் சொந்தக்காரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் பலவித வழக்குகளைத் தொடர்ந்து, அதன் காரணத்தினால் எத்தனையோ கை ஏர் வாரம்தார்கள் நிலத்தை "ஸரண்டர்" செய்துவிட்டிருப்பார்கள். "நாங்கள் அந்த நிலத்தில் பயிர் வைக்க முன்வரவில்லை" என்று கால் கடுதாசியில் அனேக வாரம் தாரர்களை மிராசுதார்கள் எழுதச் சொல்லி, அதன் காரணத்தால், அனேகம் பேர்கள் மாட்டு வாரம்தாரர்கள் அல்ல, கை ஏர் வாரம்தார்கள் அல்ல என்று சென்னை உயர்நீதி மன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு, பார்க்கும்போது, மாட்டு வாரம்தாரர்கள், கை ஏர் வாரம்தாரர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால், இன்று ஒரு சத விகிதத்தினர்கூட தேரமாட்டார்கள். இப்பேர்ப்பட்ட நிலையில், இந்தச் சட்டத்தை எட்டு மாதங்கள் கழித்துக்கொண்டுவருவது உண்மையிலேயே மிராசு தாரர்களுக்கு ஒரு நல்ல காலத்தைத் தரவேண்டும், சட்டத்தைக்கொண்டு அவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் என்று சொல்லவேண்டும். அவர்களுக்கு அவகாசம் கொடுப்பதற்காகத்தான் இந்த நிலையில் சட்டம் கொண்டுவரப்படுகிறது

"கை ஏர் வாரம்தார்கள் வேலை செய்த நிலத்தின் நிகர மகசூலில் எழில் ஒரு பகுதி" என்று கை ஏர் வாரம்தாரருக்குக் கொடுக்க படத்தக்க ஊதியம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. போரடி முதலியவைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், ஏறத்தாழ எழில் ஒரு பகுதி இப்போதே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்தில், போரடியும் சேர்த்து, அதில் எழில் ஒரு பகுதி என்று குறிப்பிட்டிருக்கிறது. போரடியை நீக்கி, நிகர மாசூலில் எழில் ஒரு பகுதி, அல்லது ஐந்தில் ஒரு பகுதி என்று சொல்லக் கூடிய நிலையில் இந்த சர்க்கார் சட்டத்தைக் கொண்டுவரவில்லை.

திருச்சி மாவட்டத்தில்தான் இத்தகைய கை ஏர் வாரம்தாரர்களும், மாட்டு வாரம்தாரர்களும் இருக்கிறார்கள் என்பது சர்க்காருடைய வாதம். ஆனால் நான் சொல்வேன்—மாட்டு வாரம்தாரர்களும், கை ஏர் வாரம்

தாரர்களும் பிற மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். வெவ்வேறு பெயர் களுடன், என்பதை நிருபிக்கவேண்டுமானால் ஒரு சுற்றுப் பிரயாணம் தொடங்குவோம். பிற மாவட்டங்களிலெல்லாம் சுற்றி வருவோம். மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களா என்று பார்ப்போம்.

ஆகஸ்டு மாதம் 24-ந் தேதி முதல் அமைச்சர் அவர்கள் வடஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் வந்தபோது, களம்பூர் விவசாயிகள் சார்பில் மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மகஜரைக் கவனித்துப் பரிசீலனை செய்து பார்த்தால், கை ஏர் வாரம்தாரர்களும், மாட்டு வாரம் தாரர்களும் வடஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்று அவர்கள் அதில் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

ஒரு ஜதை மாட்டை வைத்துக்கொண்டு, குடும்பமே அதில் ஈடுபட்டு, உரம் போடுவது போன்ற வகையில் செலவழிப்பதற்கு ஒரு விகிதாசாரம் ஏற்படுத்திக்கொண்டு சில பணத்தைக் கொடுத்தால் அவர்களை மாட்டு வாரம்தாரர்கள் என்று சொல்கிறார்கள். கை ஏர் வாரம்தாரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் பம்ப் செட்டில் வேலை செய்பவர்கள். மின்சாரம் நாளுக்கு நாள் பரவிக்கொண்டு வருகிறது. அதில் வேலை செய்துகொண்டு வருகிறவர்களுக்கு, வடஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, பிற மாவட்டங் களிலும்கூட, பத்திலொரு பங்கு, பன்னிரெண்டிலொரு பங்கு, எட்டிலொரு பங்கு என்றும், ஒரு கலத்திற்கு 1½ மரக்கால், 1¼ மரக்கால் என்றும், வடஆற்காடு மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களை கை ஏர் வாரம்தாரர்கள் என்று சொல்கிறார்கள். புருஷன், மனைவி இரண்டுபேரும் சேர்ந்து அந்த நிலத்தில் இரவு பகலாக உழைத்துப் பயிர் வைத்தார்களானால், அவர் களுக்கு ஒரு கலத்தில் ஒரு மரக்கால், ஒன்றரை மரக்கால் என்று இப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களும் கை ஏர் வாரம்தாரர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அப்படியிருந்தும், சர்க்கார் திருச்சி தவிர பிற மாவட்டங்களில் இருக்கும் கை ஏர் வாரம் தாரர்களையும், மாட்டு வாரம் தாரர்களையும் அலட்சியப்படுத்துகிறார்கள். சென்ற காலத்தில் மட்டுமல்ல. ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு முன்னால்கூட, களம்பூர் விவசாயிகள் சார்பாகப் பலவித புரட்சி ஏற்பட்டு, அப்போதுகூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியெல்லாம் எடுத்துச் சொல்லிவந்தும், அவர்களுடைய முறையீடுகள் கவனிக்கப்படாமல், காலம் தாழ்த்தி இந்தச் சட்டம் திருச்சி மாவட்டத்திற்கு மட்டும் பொருந்தும் படியாகக் கொண்டு வரப்படுகிறது.

எவ்வளவு மிராசுதாரர்கள் சட்டம் வருவதற்குள்ளாகத் தப்பித்துக் கொண்டுவிட முடியுமோ அவ்வளவு பேர்கள் தப்பித்துக்கொண்டுவிட வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு காலம் தாழ்ந்து இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. சட்டம் வருவதற்குள் உயர் நீதி மன்றத்தில் பலவித வழக்குகள் தொடர்ந்து, வாரத்திற்குப் பயிரிடுகிற மாட்டு வாரம் தாரர்களையும், கை ஏர் வாரம் தாரர்களையும் "இனிமேல் இந்த நிலத்தில் நான் பயிரிடவில்லை" என்று கால் கடுதாசியில் எழுதித் தரவேண்டு மென்று வற்புறுத்தி, திருச்சி மாவட்டத்தில் வாங்கிவிட்டார்கள். அதன் மூலமாக உயர்நீதி மன்றத்தில் "ரிட்" பெட்டிஷன் போட்டு, நிலத்தை ஸரண்டர் செய்ய வைத்திருக்கிறார்கள். ஆகவே, கை ஏர் வாரம்தாரர்களுக்கும், மாட்டு வாரம்தாரர்களுக்கும் உதவிகரமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. இந்தச் சட்டத்தில் இன்னும் பல குறை பாடுகள் இருக்கின்றன. அவைகளை, பிரிவு பிரிவாக இந்தச் சட்டம் பரிசீலனைக்கு வரும்போது நான் விளக்கமாக அவைகளை எடுத்துச்சொல் கிறேன். என்ன விளக்கமாகச் சொன்னாலும் இந்த சர்க்கார் ஏற்க மாட்டார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். காரணம், அவர்கள் மிராசு தாரர்களுக்குத்தான் நல்ல முறையில் ஆதரவு தருகிறார்களேயொழிய, மாநிலத்தில் மிகவும் பிற்பட்ட நிலையில், நாளொன்றுக்கு ஐந்தணாகூட பெற முடியாத நிலையில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மாட்டு வாரம்

29th October 1958] [Sri S. M. Annamalai]

தாரர்கள், கை ஏர் வாரம்தாரர்கள் போன்றவர்களுக்கு, நல்ல முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து பெரும்பான்மை மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணம் சர்க்காருக்கு இல்லை. அப்படிப்பட்ட நல்ல எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால், இந்தச் சட்டத்தை இவ்வளவு காலம் தாழ்ந்து கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை. இவ்வளவு காலம் தாழ்த்திக்கொண்டுவந்திருக்கிற சட்டத்தில்கூட, பலவித தொல்லைகளைக் கொடுக்கக்கூடிய வகையில் பல பிரிவுகளைப் போட்டிருப்பது சர்க்காருக்கு நல்ல எண்ணம் கிடையாது என்பதை நிரூபிக்கிறது என்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபா நாயகர் அவர்களே, இப்பொழுது கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவைக் கொள்கை அடிப்படையில் சரிவர அமைந்திருக்கிறது என்ற முறையில், பூராவிலும் ஆதரித்து, அதிலே ஒரு சில திருத்தங்கள் மிகத் தேவை என்பதை வற்புறுத்திச் சொல்லி, எனது பேச்சைத் துவக்கு கின்றேன்.

முதன் முதலாக, இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான நோக்கம் இம் மசோதாவின் ப்ரியாம்பிளிலே வரையறுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் கை ஏர் வாரம்தாரர்களுக்கும், மாட்டு வாரம்தார் களுக்கும் சரியான முறையில் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை முதலிலே வரவேற்கிறேன். அது அவசியம் என்பதை இந்தச் சபையே ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால், அதற்குக் கொடுத் திருக்கும் காரணங்கள் உள்ளபடியே சரியாக இல்லை என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஏற்கனவே இருந்த முறையிலே அவர்களுக்குள்ள உரிமை, கடமை என்னவென்பதைப்பற்றிச் சந்தேகம் இருந்ததாகவும், அந்தச் சந்தேகத் தின் அடிப்படையிலே ஏராளமான தகராறுகள் ஆங்காங்கே எழுந்தன என்றும், கொந்தளிப்பு அதிகமாக ஏற்பட்டு, உள்ளபடியே உற்பத்தி கூட பாதிக்கப்படுமோ என்ற முறையிலே இருந்தது என்ற காரணத்தை இந்த மசோதா கொண்டுவருவதற்கு குறிப்பிட்டிருப்பது ஒருவேளை சரியாக இல்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

(Deputy Speaker in the Chair.)

இதுபோன்ற ஒரு கொந்தளிப்பு அல்லது பரபரப்பு அந்த வட்டாரத்தில் ஏற்பட்ட காரணத்தைப் பரிசிலனை செய்து பார்ப்போம். ஏற்கனவே அனேக நிலச் சட்டங்கள் வந்திருக்கின்றன. அந்தச் சட்டங்கள் வரு வதற்கு முன்னாலே கூட அந்தந்தச் சட்டத்திலேயுள்ள கடமைகளைப்பற்றி எடுத்துச் சொல்லாது, அதிலுள்ள உரிமைகளைப்பற்றி மட்டும் எடுத்துச் சொல்லி, எவ்வளவு சொல்லவேண்டுமோ அதைவிட அதிகமாக எடுத்துச் சொல்லி, இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால்—" நீங்கள் எல் லோரும் இந்த இந்த நிலத்திற்கு உரிமையாளர், சொந்தக்காரர் ஆகப் போகிறீர்கள் " போன்ற ஒரு சில கொள்கைகளையெல்லாம் எடுத்துச் சொன்ன காரணத்தால், ஆங்காங்கே ஒவ்வொருவரும், நிலத்தை உழுது கொண்டிருந்தவன் அந்த நிலத்திலே அப்படியே பற்றி தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டும், அதே சந்தர்ப்பத்தில் நிலச் சொந்தக்காரனை எப்படியாவது வெளியேற்றிவிட்டால்தான் நாளைக்கு இந்த நிலம் நமக்கு ஏற்படும் என்ற எண்ணம் ஏற்பட்டும் இந்த இரண்டு எண் ணங்கள் மோதிக்கொண்ட காரணத்தால் தான் ஆங்காங்கே கொந்தளிப்பு கள் ஏற்பட்டனவே தவிர, ஏதோ இரண்டு முறை சாகுபடியிலும் யார் யாருக்கு என்ன என்ன உரிமைகளும் கடமைகளும் இருக்கின்றன என் பவை சரியான முறையில் அமையவில்லை என்ற காரணத்தால் இந்தத் தகராறு ஏற்படவில்லை என்பதை முதன் முதலாக நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

12-30 p.m. அடுத்தபடியாக இப்போது இந்தச் சட்டத்தின் அடிப்படையில் பார்க்கிற போது இது இந்தச் சபையில் இப்போது பாஸாளுலும் பிரிஸிடெண்டி னுடைய அனுமதியை எப்போது பெறுகிறதோ அப்போது அமுலுக்கு வருகிறது. ஆகவே இதற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். 1959-ம் ஆண்டு எப்ரல் முதற்கொண்டு அமுலுக்கு வரும் என்று போட்டுவிட்டால் எந்தவிதமான சங்கடமும் இருக்காது என்று கொடுத் திருக்கிறேம். கையேர்வாரம்தாரரை மீட்டும் அமர்த்திக் கொள்வது சம் பந்தமான பிரிவு 5-வதைப் பொருத்தும், பிரிவு எட்டாவதைப் பொருத்தும் அநேக திருத்தங்கள் கொடுத்திருக்கிருர்கள். ஆனுலும் கூட இந்தச் சட்டம் பிரிசிடெண்டினுடைய அனுமதியை நடு சாகுபடி காலத்தில் பெற் ருல் அப்போதே அமுலுக்கு வரும். நிலத்தில் சாகுபடி எப்படியாகி யிருக்கிறது என்று பார்த்தால் ஒரு சில இடங்களில் மாட்டுவாரம்தாரர் களுடைய செலவு அதிகமாக இருந்திருக்கும். கையேர் வாரம்தாரர்கள் பயிர்செலவு செய்கிற நிலங்களில் நிலக்காரர் செலவு அதிகமாக இருந் திருக்கும். அப்படி இருந்த போதிலும் கூட இப்போது இருக்கக் கூடிய முறை தொடர்ந்து இருக்கும், அவரவர் செலவை அவரவர் செய்து இருக்கிருர்கள், அவரவர்களுடைய உரிமையை அவரவர்கள் அனுபவிக்க வேண்டும் என்று செய்யலாம்.

பத்து ஏக்கருக்கு அதிகமாகவுள்ள நிலக்காரர்கள் நிலங்கள் அத்தனே யையும் மாட்டுவாரம்தார், குத்தகை சாகுபடியாளர் என்ற முறையில் வரையறுக்க முற்படுகிற காரணத்தினுல் அவர்கள் எல்லோருமே குத்த கைக்காரர் ஆகிருர்கள். நிலச்செலவு 60 சத விகிதம், 40 சத விகிதம் என்ற வகையில் அப்போது அமைகிறது. இதையெல்லாம் உத்தேசித்து இந்த மசோதா அடுத்த பசலி ஆரம்பத்திலிருந்து எப்ரல் 59-ல் இருந்து அமுலுக்கு வரும் என்று குறிப்பிட்டுவிட்டால் எந்தவிதமான குழப்பமும் இராது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக கையேர் வாரந்தார் என்ருல் யார், மாட்டு வாரந் தார் என்ருல் யார் என்று வரையறை செய்து கொடுக்கப்படுகிறது. இந்த வரையறையைப் பொருத்த அளவில் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் குறிப்பிட்ட நெல்லே சம்பளமாகப் பெற்றுக்கொண்டு வந்த போதிலும் கூட குறிப்பிட்ட வெள்ளாமையில் அவர்களுக்குள்ள விகிதா சாரம் எவ்வளவு என்பது குறிப்பிடப்படவேண்டும் என்பதுதான். " நிலத் தில் எந்தப் பயிர் விஷயமாக வேலே நடத்தப்படுகிறதோ அந்தப் பயிரில் ஒரு பங்கை ஊதியமாகப் பெறுவது அல்லது குறிப்பிட்டுள்ள அளவுள்ள நெல்லேப் பெற்றுக் கொள்வது அல்லது அத்தகைய பங்கையும் நெல்லே யும் பெற்றுக்கொள்வது என்கிற உடன்படிக்கையைச் செய்துகொண்டு வேலே செய்பவர்கள் கையேர் வாரந்தார்கள் என்று குறிப்பிடுவது அவ்வளவு பொருத்தமல்ல என்பதைச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைவிட முக்கியமாக ஆங்காங்கு இருக்கக் கூடிய நிலேமைக்குத் தக்கபடியாக இடத்திற்கு இடம் இவற்றில் பல மாறுபாடுகள் இருக்கின்றன. அந்த அந்தப் பிரதேசத்திலுள்ள உடன்படிக்கையின்படி அவர்கள் ஒவ் வொரு வேலே செய்வார்கள். இரண்டு மூன்று வேலே செய்யக் கூடிய நிலேமையும் இருக்கிறது. இப்படி உடன்படிக்கை செய்து கொண்டு பிர தேசத்திற்குப் பிரதேசம் அவர்கள் செய்து வருகிற வேலே மாறுபடுவதால் இன்ன இன்ன வேலேகள் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டு நாம் வரை யறை செய்வதோடு, புதிய அம்சங்களேயும் புகுத்துவது பலவிதத்தில் இடையூருக அமையும் என்று குறிப்பிட விரும்புகிறேன். கையேர் வாரம், மாட்டு வாரம் இவற்றில் ஏற்கனவே இருக்கிற குழப்பங்களோடு இதனுல் வேறுபல கிளர்ச்சிகளும் உண்டாவதற்கு இடம் அளித்துவிடக்கூடாதென் பதைச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்போது இருக்கக் கூடிய சட்டத்தில் எவ்வளவு கூலி கையேர் வாரந்தாரருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதற்கு ஒரு ஷெட்யூல் அமைந் திருக்கிறது. " நான்கு மாதங்களுக்குக் குறையாத கால அளவுக்கு பிரதி

29th October 1958] [Sri S. Lazar]

மாதமும் நாற்பத்து ஐந்து பட்டணம் படி நெல்" கொடுக்கவேண்டு மென்றும், "நிலத்தின் நிகர மகசூலில் ஏழில் ஒரு பகுதி" கொடுக்கப் படவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலும் தகராறுகள் ஏற் படும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இதற்கு முன் அமுலில் இருந்து கொண்டிருக்கிற சட்டம், ஆசாரம், வழக்கம், உடன் படிக்கை அல்லது யாதொரு கோர்ட்டின் டிக்ரி அல்லது உத்தரவில் என்ன கொடுக்கப்பட்டு வருகிறதோ அதையே நாம் வரையறுத்துவிட்டால் அதுவே பழக்கவழக்கமாகிவிடும் என்று, எந்த விதமான தகராறும் ஏற் படாது என்கிற அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இப்போது கையேர் வாரக்காரர்களோ, மாட்டு வாரந் தாரர்களோ 1—1—1957-க்குப் பிறகும் வெளியேற்றப்பட்டிருந்தால் அவர் கள் அத்தனை பேரையும் மீண்டும் வேலையில் அமர்த்துவதற்கு ஒரு சில பிரிவுகள் சட்டத்தில் அமைந்திருக்கின்றன. இது வரவேற்கத் தக்க அம்ச மாகும். ஆனால் குறிப்பாக கவனிக்கவேண்டிய அம்சம், ஒரு சிலர் பெரிய தவறு செய்து அதற்காக கோர்ட்டுகளிலே தண்டனை பெற்றவர்களாக இருந்தால் அவர்கள் மீண்டும் நிலத்தில் புகுத்தப்பட்டால் சாகுபடி நல்லவாறு நடக்குமா என்று பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே நியாயமான காரணங்களுக்காக வெளியேற்றப்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு இந்தப் பிரிவினால் பாதுகாப்பு இல்லாதவாறு செய்தால் அநேகமாக எவ்விதமான தகராறும் ஏற்படாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். 12-30 p.m.

அடுத்தபடியாக இப்போது மூன்று ஏக்கர் அல்லது அதற்குக் கீழ் உள்ளவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கவேண்டுமென்ற முறையில் ஒரு பிரிவு இருக்கிறது. செலக்ட் கமிட்டி சிபார்சின்படி அமைந்த அந்தப் பகுதி வரவேற்கத் தக்க அம்சமாக விளங்குகிறது. இதற்கு எல்லை கட்டி யிருக்கிறார்கள். இதற்கு ஒரு உச்ச வரம்பு இருக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். விற்பனை வரி, தொழில் வரி அல்லது வருமான வரி விதிப்ப தற்குச் சம்பந்தப்பட்ட சட்டங்களின்படி 19—6—1957-ஆம் ஆண்டில் எவ் வித வரியும் விதிக்கப்படாத நிலச் சொந்தக்காரருக்கு விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பாதுகாப்பு நல்ல முறையில் அமையும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக பத்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள நிலக்காரர்கள் மூன்று ஏக்கரை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொண்டு, மீதியுள்ள நிலங்களில் மாட்டு வாரந்தார்களுக்கு, கையேர் வாரந்தார்களுக்கு உரிமை அளிக்கப்படுகிற பிரிவும் அமைந்திருக்கிறது. நிலக்காரர்களுக்குப் பாது காப்பு இருப்பதோடு சாகுபடியாளர்களுக்கும் பாதுகாப்பு அவசியம். அது தான் சட்டத்தில் இருக்கிறது. அந்தப் பிரிவின் அடிப்படையில் அவர்களை வெளியேற்ற முடியும் என்ற முறையில் அமைந்திருக்கிறது. இதிலே பல கஷ்டங்கள் வரும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டெனன்ஸி ஆக்டின்படி நிலத்தை சரியான முறை யில் சாகுபடி செய்யாமல் இருப்பவர்களை வெளியேற்றலாம். மாட்டு வாரந் தாரரைப் பொருத்து முதலாவது விதியை எடுத்துக் கொண்டால் பாக்கி ஏற்பட்டால் அவர்களை வெளியேற்ற முடியும் என்ற பிரிவு டெனன்ஸி ஆக்டில் இருக்கிறது. மாட்டு வாரக்காரர் அத்தனை பேரும் டெனன்ட்ஸ் ஆகவில்லை. இந்தப் பிரிவு அவர்களைப் பொருத்த வரையில் அப்படி செய்யமுடியாது.

அடுத்தபடியாக, விவசாயி நிலத்தில் உழவுத் தொழிலை சரிவரச் செய்யவில்லையானால் அவரை நிலச்சுவான்தார் நிலத்திலிருந்து வெளி யேற்றுவதற்கு சாகுபடியாளர் (tenants) பாதுகாப்புச் சட்டத்தில் நிலச் சுவாந்தாருக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய ஷரத்து, மாட்டுவாரம்தார்களைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடாது என்று நான் சொல்வேன். ஏனென்றால், அந்த உரிமை நிலச்சுவாந்தாருக்கு இருந் தால், மாட்டுவாரம்தார் சரியாக பயிர்த்தொழில் செய்யவில்லை என்று- 12-40 p.m.

அவர் மீது குற்றம்சாட்டி அவரை நிலச்சுவாந்தார் எளிதில் நிலத்தி லிருந்து வெளியேற்ற முடியும். எனவே அத்தகைய ஷரத்து மாட்டு வாரம்தாருக்கு பாதகமாக அமையும்.

மேலும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் கொடுக்கும் தீர்ப்புகளின் மீது அப்பீல் செய்யவோ ரிவிஷன் கோரவோ வேண்டுமென்றால், மசோதா வில் உள்ளபடி, குத்தகைதாரரும் நிலச் சொந்தக்காரரும் மாட்டுவாரம் தாரரும் சென்னைக்கு வந்து ஹைக்கோர்ட்டில் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயி செய்யவேண்டிய செலவைக் குறைக்க வேண்டும் என்பது தான் சர்க்காரின் நோக்கமாகவும் கொள்கையாகவும் இருக் கிறது. இதற்கு முரணாக மசோதா அமைந்திருக்கிறது. ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள சாகுபடியாளர் (tenants) பாதுகாப்புச் சட்டத்தில் இத் தகைய உரிமை ஹைக்கோர்ட்டுக்கே அளிக்கப்பட்டிருப்பதால் இந்த மசோ தாவிலும் இந்த உரிமை ஹைக்கோர்ட்டுக்கே அளிக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் பதில் சொல்லக் கூடும். சாகுபடியாளர் (tenants) பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதாவாக இந்த மசோதா இருக்குமேயானால் அந்த வாதத்தை நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் இந்த மசோதா அப்படிப்பட்டது அல்ல. எனவே, ஆங்காங்கே இருக்கும் ஜில்லா நீதிமன்றங்களுக்கு இந்த உரிமையைக் கொடுத்தால் நிலச் சொந் தக்காரர்களுக்கும் மாட்டுவாரம்தாரர்களுக்கும் மிகவும் அனுகூலமாக இருக்கும். இதற்கான திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் கூறிய விஷயங்களை நன்கு பரிசீலனை செய்து அவசியமான திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri P. G. KARUTHIRUMAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். திருச்சிருப்பள்ளி ஜில்லா வில், குறிப்பாக அங்குள்ள சில கிராமங்களில் இருக்கும் பழக்க வழக்கங் களையொட்டித்தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. நான் ஒரு விவசாயி என்ற முறையிலும், பொறுக்குக் கமிட்டி அங்கத்தினன் என்ற முறையிலும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயி யின் பொறுப்பு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது. "உழுபவ னுக்கே நிலம் சொந்தம்" என்று சிலர் சொல்லுகிறார்கள் 'உழுப வனுக்கே நிலம் சொந்தம் என்பதன் கருத்து என்ன என்பதை நாம் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். உணவு உற்பத்தியைப் பெருக்குபவனுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டு மென்பதுதான் அதன் கருத்து. உற்பத்தியைப் பெருக்குபவன், நிலத்தை உழும் கூலியாளா, அல்லது குத்தகைதாரரா அல்லது நிலச் சொந்தக் காரரா? சில குத்தகைதாரர்கள் இன்னொருவரைக் கொண்டு நிலத்தை உழுகிறார்கள். நிலத்தை உழுது உற்பத்தி செய்பவருக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். சர்க்காரின் கொள்கையும் திட்டமும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏதுவாக இருக்க வேண்டும். இரண்டு ஏக்கர் நிலமுடைய ஒரு நிலச்சுவாந்தாரும் ஐந்து ஏக்கர் நிலமுடைய மற்றொரு நிலச்சுவாந்தாரும் இருக்கிறார்கள். என்று வைத்துக்கொள்வோம். இரண்டு ஏக்கர் நிலமுடையவர் ஐந்து மூட்டை நெல்லும் ஐந்து ஏக்கர் நிலமுடையவர் 15 மூட்டை நெல்லும் விளைவித்தால், அதிகமாக விளைவித்த ஐந்து ஏக்கர் நிலக்காரர் தான் சிறந்த உழவர். இதை சர்க்காரும் கனம் அங்கத்தினர்களும் மனதில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தில், உற்பத்திச் செலவைப் பொறுத்தவரையில் நிலச்சொந் தக்காரருக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஒரு ஏக்கர் நஞ்சையில் 250 ரூபாய் வரையில் உற்பத்திச் செலவு இருக்கும். பூமியை உழுவதிலிருந்து தானியத்தையும் வைக்கோலையும் வீட்டிற்குக் கொண்டு போகும் வரை செய்ய வேண்டிய மொத்தச் செலவு ரூ. 250. உழுதல், நாற்று நடுதல், களை எடுத்தல், மேற்பார்வை

29th October 1958] [Sri P. G. Karuthiruman]

செய்தல், அறுவடை செய்தல் முதலிய காரியங்களுக்கு ஆகும் செலவு மொத்தம் ரூ. 250. உரமிடுதலுக்கான செலவும் இதில் சேர்ந்திருக்கிறது. நல்ல மகசூல் கிடைக்க வேண்டுமென்றால், 70—75 ரூபாய்க்கு உரமிட வேண்டியது மிக மிக அவசியம். நாற்று நடுவதற்கான செலவு ஆங்காங்கே வேறுபடும். சில பிராந்தியங்களில் 12 அணுவிற்கு நாற்று நடுவார்கள். சிலர் 1 ரூபாய்க்கு நாற்று நடுவார்கள். சில கூலிகள் $1\frac{1}{4}$ ரூபாய் கூலிக்கு நாற்று நடுவார்கள். அறுவடைக்கு 50 ரூபாய் செலவாகும். மேற்பார்வைக்கும் பூமியைத் திருத்துவதற்குமாக மொத்தம் 50 ரூபாய் செலவாகும். இந்தச் செலவுகளில் கையேர் வாரம்தார்களும் மாட்டு வாரம்தார்களும் எவ்வளவு பங்கை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். கையேர் வாரம் என்றால் என்ன, மாட்டு வாரம் என்றால் என்ன என்பதை நாம் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். மாடுகள் இல்லாமல் உழும் வாரம்தார் கையேர் வாரம்தார். அவ்வாறு உழுபவர்கள் ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கருக்கு ஒரு மூட்டை நெல்லோ இரண்டு மூட்டை நெல்லோ கூலி பெறுவார்கள். மாடுகளைக் கொண்டு உழுபவர்கள் மாட்டு வாரம்தார்கள். மாட்டு வாரம்தார்களின் சிலர் தங்கள் மாடுகளை மட்டுமே உபயோகிப்பார்கள். சில மாட்டு வாரம்தார்கள் தங்கள் மாடுகளுடன், நிலச் சொந்தக்காரர்களின் மாடுகளையும் உபயோகிப்பார்கள். இவர்களில் சிலர் பல நிலச் சொந்தக்காரர்களிடம் வேலை பார்ப்பார்கள். ஒரு நிலச் தக்காரரின் இரண்டு ஏக்கர் நிலத்தையும் மற்றொரு நிலச்சொந்தக் சொந்காரரின் மூன்று ஏக்கர் நிலத்தையும் ஒரு வாரம்தார் உழுவார். பொறுக்குக் கமிட்டியில் பல விஷயங்கள் தெரிந்தன. மாட்டு வாரம்தார்கள் சில இடங்களில் கையேர் வாரத்திற்கும் வேலை செய்கிறார்கள். ஆனால் கையேர் வாரம்தார்கள் மாட்டுவாரம்தார்களின் வேலையைச் செய்ய வில்லை. நஞ்சையில் உற்பத்திச் செலவாகிய 250 ரூபாயில் 1/5 பங்கைத் தான் மாட்டு வாரம்தார்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மீதிச் செலவை நிலச்சொந்தக்காரர்தான் செய்ய வேண்டியிருக்கிறது. களைகள் எடுக்கும் போது மாட்டு வாரம்தார்கள் கூலி கொடுக்கிறார்களா ? அந்தச் செலவு களையெல்லாம் மாட்டுவாரம்தார் ஏற்றுக்கொண்டால்தான், அவருக்கு, தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் குத்தகைதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை அப்படியே கொடுக்கலாம். குத்தகைதாரர்கள் எனப்படுபவர்கள், அவர்களே உற்பத்திச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். நாற்று நடுவது, உரம் போடுவது, அறுவடை செய்வது ஆகிய எல்லாக் காரியங்களுக்குமான செலவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

" உழுபவனுக்கே நிலம் சொந்தம் " என்ற கோஷம் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குச் சாதகமாக இல்லை. " சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி " என்ற கதையாகத்தான் இருக்கிறது அந்த கோஷம். அந்த கோஷம், இப்போது நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழுபவர்களுக்கும் இடையில் இருந்த சுமுகமான உறவைக் கெடுத்திருக்கிறது. அந்த கோஷம் எதிர்க்கட்சிகள் செல்வாக்கடைவதற்குத்தா , ஏதுவாக இருக்கிறது. 12-50 p.m.

இந்தக் கிளர்ச்சிகளையெல்லாம், பட்டணத்தில் இருந்து கொண்டு தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களைப் போல் கிராமங்களிலும் கிளர்ச்சி செய்யவேண்டுமென்று நினைப்பது அவ்வளவு சரியல்ல. சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் இப்படிக் கிடையாது. ஜாதி அடிப்படையில் அல்லது கட்சி அடிப்படையில் உற்பத்தியைப் பற்றியோ அல்லது பூமியைப் பற்றிய கவலையே இல்லாமல் உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்று சொல்வதில் அர்த்தமே கிடையாது. நாற்றுப் பரித்து நடுவதற்கும் ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய் ஆகிறது. ஆகவே, அந்த வேலை செய்யும் பெண்களுக்கு இந்த பூமியின் பேரில் உள்ள பொறுப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன். அப்படி நாற்று நடும் பெண்களுக்கு பூமியின் மேல் உள்ள உரிமை என்ன ? ஆகவே, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்றால், உழக்கூடிய தொழிலைவிட, அறுப்பவர்களுக்கும், நாற்று

நடுகிறவர்களுக்கும் இரண்டு பங்கு பொறுப்பு அதில் இருக்கிறது. ஆக, இவையெல்லாவற்றையும் கணக்கிட்டு பார்த்தால், சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா மிகவும் பொறுத்தமானதாகும். பத்து எக்கருக்கு மேல் சொந்தமாக நன்செய் நிலம் வைத்திருக்கிற யாதொரு நிலச் சொந்தக்காரர் கீழுள்ள மாட்டு வாரம்தாரர் எவருக்கும் அச்சட்டத்தின் விதிகள் பிரயோகிக்கப்படும் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. மூன்று எக்கர் உள்ளவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தம், நிலச்சீர்திருத்தம் என்று சொல்வதை விட, முதலில் மன சீர்திருத்தம்தான் அடையவேண்டும். முதலில் மனச் சீர்திருத்தம் அடைந்துவிட்டு அதிலிருந்து நிலச் சீர்திருத்தம் வந்தால் அப்பொழுது உற்பத்தியைப் பெருக்க வழியிருக்குமே அல்லாது மனச்சீர்திருத்தம் இல்லாமல் நிலச்சீர்திருத்தம் என்று காது அளவில் இருந்தால் யாதொரு பிரயோஜனமும் அதனுல் ஏற்படப் போவதில்லை. ஆகவே, மனச்சீர்த்திருத்தம் செய்வது யார் என்ற பிரச்னை எழுகிறது. அதை எப்படிச் செய்யமுடியும்? விவசாயத்தைப் பற்றிய காரியங்களை உண்மை விவசாயிகளிடம் விட வேண்டும். அக்கிரமமாக குடியானவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றுவதை நான் ஆதரிக்கவில்லை என்பதை தெளிவு படுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்வதாயிருந்தால் இவ்வளவு சட்டங்கள் கொண்டு வருவதற்கு அவசியமேயில்லை. யார் பூமியை உழுது சாகுபடி செய்கிறுர்களோ, உற்பத்திப் பெருக்கில் யார் ஈடுபட்டிருக்கிறுர்களோ, அவர்களுக்கு பூர்ண பாதுகாப்பு அளிக்க சர்க்கார் எப்பொழுதும் தயார். அதை செய்து கொண்டும் வருகிறுர்கள். கையேற்வாரம், மாட்டு வாரம் முறை உள்ள இடத்திலிருந்து வருபவனல்ல நான். ஆனுல் அதைப்பற்றி இங்குள்ள பிரதிநிதிகள் சொல்வதை எல்லாம் எடுத்துப் பார்க்கும்போது சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா நல்லதொரு மசோதாவாகும். குடியானவர்களுக்கும், பூமியின் சொந்தக்காரனுக்கும் கஷ்டமில்லாத முறையில் இம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு, இதை யார் கொண்டு வந்தார்கள், யார் பெரியவர்கள் என்பதைப்பற்றி அதிகமாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இப்பொழுது இதைக் கொண்டு வந்திருப்பது சர்க்கார்தான். ஆகவே, கட்சி மனப்பான்மையின்றி, குடியானவர் மனப்பான்மையில், நல்லதொரு மனப்பான்மையில் இதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். ஆக, இந்த மசோதாவை வரவேற்று சிக்கல்கள் ஏதாவது இருந்தால் அவைகளை ரூல்ஸ் மூலம் தீர்த்துக் கொள்ளலாம். அதற்கு வழி செய்யவேண்டும். ஒருவர் வந்து நான்தான் இந்நிலத்தை உழுதேன் என்று சொன்னுல் அதை நிரூபிக்க ஒருவரும் கிடையாது. எதற்கு இதைச் சொல்லுகிறேன் என்றுல், முதலில் மனச்சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். ஆக, கிராமங்களில் விவசாயிகள் நல்ல முறையில் வாழ்வதற்கேற்ற சூழ் நிலையை ஏற்படுத்திக் கொடுத்து இந்த மசோதாவை பாஸாக்கி அதை நல்ல முறையில் அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member Sri Kothandaraman can take only five minutes and finish his speech by 1 o'clock.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கையேர்வாரம், மாட்டுவாரம் மசோதாவின் பேரில் நடந்த விவாதத்தில் எனக்கு முன் பேசிய நண்பர் பல அபிப்பிராயங்களைக் கூறினுர். இன்றைய தினம், இந்த கையேர்வாரம், மாட்டுவாரம் இவைகளை பல பகுதிகளாக, பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். நமது மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி கொறடா அவர்கள், ஒரு கட்சியினர் உழுபவனுக்குத்தான் நிலம் என்று சொல்வது நாங்கள்தான் நிலம் வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்வதாக பேசினுர்கள். அவர் தெரியாத்தனமாகத்தான் அப்படி சொல்கிறுர்கள் என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

29th October 1958]

SRI P. G. KARUTHIRUMAN : அவர் ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு விளைச்சல் காட்டுவார், நான் எந்தளவு உற்பத்தி செய்திருக்கிறேன், உற்பத்தி செய்யமுடியும் என்று போட்டி போடத் தயார்.

DEPUTY SPEAKER : It is not a point of order.

SRI V. K. KOTHANDARAMAN : தெரியாத்தனமாக. . . . .

SRI P. G. KARUTHIRUMAN : தெரியாத்தனம் என்று சொல்வதை வாபஸ் வாங்கவேண்டும்.

DEPUTY SPEAKER : The hon. Member should not repeat it.

SRI A. GOVINDASAMY : " தெரியாத்தனம் " என்பது " அன்பார்லிமெண்டரியா " ?

DEPUTY SPEAKER : It is an insinuation against the hon. Member and I have already given my decision and nobody can question it.

SRI V. K. KOTHANDARAMAN : மாட்டுவாரம் என்று சொன்னால், விவசாயத்தில் மாடு மட்டும் இருக்கும். மற்றப்படி நிலம் மிராசுதாருடையது. களையெடுப்பது முதற்கொண்டு, நாற்று நடுவது முதற்கொண்டு எல்லாச் செலவுகளும் விவசாயினுடையது. அதேபோன்று கையேர் வாரம்தார் என்றால், உழுவதற்கு ஏர் கொண்டு போய் உழுபவராவார். விவசாயத்திற்குள்ள செலவுகளை எல்லாம் விவசாயிகள் செய்கின்றனர். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லும்போது, நாற்று நடக் கூடியவர்களும் இதில் பங்கு கேட்கலாமே என்று சொல்லப்பட்டது. அவர்களும் கேட்கலாம். அறுவடை செய்யக்கூடியவர்களும் கேட்கலாம். வேண்டுமானால் உரம் உற்பத்தி செய்யக் கூடியவர்களும் இதில் பங்கு கேட்கலாம். அதே நேரத்தில் உணவை வாங்கி சாப்பிடக் கூடியவர்களும், நாங்கள் உணவுப் பொருள்களை வாங்கி சாப்பிடவில்லை என்றால் உணவுப் பொருள்கள் செலவாகாதே என்று சொல்லி எங்களுக்கும் நிலம் கொடுக்கவேண்டுமென்று சொல்லலாம். விதண்டாவாதம் செய்யவேண்டுமென்று சொன்னால் பல கோணங்கலிருந்து பார்த்து பலதும் சொல்லலாம். எதை வேண்டுமானாலும் பேசலாம். அப்படிப் 1 p.m. பேசுவதற்கு எல்லோருக்கும் தெரியும். உழுபவனுக்குத்தான் நிலம் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது, பகலென்றும் இரவென்றும் பார்க்காமல், வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் கஷ்டப்பட்டு உழைத்து உற்பத்தியைப் எவன் பெருக்குகிறானோ அவனுக்குத்தான் நிலம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். அதை விட்டுவிட்டு வேறு கண்ணோட்டத்தில் பார்ப்பது, இனம் இனத்தோடே சேரும் என்று சொல்லக்கூடிய விதத்தில் மிராசுதார்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு சில மிராசுதார்கள் இனம் அதை ஆதரித்து பேசக்கூடிய நிலை இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆகவேதான் இவ்வளவு பாடுபட்டு கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடிய விவசாயிக்கு கடைசியில் கிடைப்பது என்ன ? அவர்கள் வெறும் கூலியை மாத்திரம்தான் பெறுகிறார்கள். அறுவடை செய்யக்கூடிய நேரத்தில். . . . .

DEPUTY SPEAKER : I hope the hon. Member will finish his speech in two minutes.

SRI V. K. KOTHANDARAMAN : மிராசுதாரோடு கூட காவலுக்கு வருகிற ஆளுக்கு காவல் சுதந்திரம் என்கிற பெயரால் ஆறு மரக்கால் கொடுக்க வேண்டும். இது தவிர வெற்றிலை, பாக்கு சுதந்திரம் மூப்பு சுதந்திரம், வெட்டியான் சுதந்திரம், சாமிகுறுணி சுதந்திரம் என்கிற பல்வேறு சுதந்திரம் என்கிற பெயரால் மிராசுதாரோடு

வருகிறவர்களுக்கு எல்லாம் இரண்டு மரக்கால் வீதம் கொடுத்து விட்டு கடைசியில் அந்த விவசாயிக்கு கிடைப்பது என்ன ? ஒரு கலத்திற்கு நாலரை மரக்கால் என்ற அடிப்படையில்தான் கிடைக்கும். அதே போன்றுகையேர் வாரம்தார்களுக்கு ஒன்றரையிலிருந்து இரண்டரை மரக்கால் வரையில் கிடைக்கும். மாட்டு வாரம்தார்களுக்கு பாதி வைக்கோல் கிடைக்கும். அதிலும் சில மிராசுதார்கள் அவர்களே வைக்கோற் புல்லை எடுத்துக்கொள்வார்கள். இந்த நிலைமையில் விவசாயி இருக்கிற பொழுது, இங்கே அவர்களுக்கு செலவு ஒன்றும் கிடையாது, மிராசுதார் கள்தான் செலவு எல்லாம் செய்கிறார்கள் என்று சொல்லி முழு பூசனிக்காயை சோற்றில் மறைக்கப்பார்க்கிறார்கள் சிலர். அவர்களுடைய நிலைமை என்ன என்பதை நேரில் போய் பார்த்துவிட்டு வரவேண்டும். பல பேர்கள் கேஸ் கொடுத்ததின் காரணமாக, அவர்கள் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டால், அவர்களுக்கும் கொடுப்பதா என்று இங்கு சொல்லப்படுகிறது. இதை கேட்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. பல பேர்கள் காங்கிரஸ்காரர்கள். பல போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். தண்டனை அடைந்துள்ளார்கள் அதன் காரணமாகத்தான் இன்றைக்கு பல பேர் மந்திரிகளாகவும் சட்டசபை அங்கத்தினர்களாகவும் வந்திருக் கிறார்கள். ஆகவே இந்த ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். நாட்டிலுள்ள மற்றவர்கள் எல்லாம் வேறு, விவசாயிகள் வேறு என்று பார்ப்பது நல்லது அல்ல. ஆகவே இந்த சட்டத்தின் பேரில் விவாதம் செய்வது மட்டுமல்ல, ஏற்கனவே கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்த சட்டத்தையே பின்பற்றி இந்தச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினால் நன்றாக இருக்கும்.

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then adjourned.

(After lunch 3 p.m.)

(Mr. Speaker in the Chair)

* **SRI M. S. SELVARAJAN :** கனம் சபா நாயகர் அவர்களே, இன்றைய தினம்—பரிசீலனையில் இருக்கக்கூடிய கையேர், மாட்டு வாரம் தார் மசோதா சிறு நிலச்சுவாந்தார்களுக்கு தக்க விதமான பாதுகாப்பு அளிக்கக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்று திருச்சி ஜில்லாவில் சில பகுதிகளுக்கு மாத்திரம் அமுல் நடத்தக் கொண்டு வரப்பட்டிருக்கூடிய மசோதா எல்லா ஜில்லாக்களிலும் இருக்கக்கூடிய சிறு நிலச்சுவாந்தார் களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சட்டத்தின் முன்னோடி.

MR. SPEAKER : மன்னிக்கவேண்டும். இன்னும் ஆறு அங்கத் தினர்கள் பேச வேண்டும் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். 3-45 மணிக்கு கனம் அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். அதற்கு முன்னதாக கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் 3 மணிக்கு பேச வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஒவ்வொரு அங்கத்தினரும் ஐந்து நிமிஷங்கள்தான் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **SRI M. S. SELVARAJAN :** சிறு நிலச்சுவாந்தார்களுக்கு பாது காப்பு அளிக்கக்கூடிய ஒரு விரிவான மசோதாவை அரசாங்கம் கொண்டு வரும் என்றும், திருச்சி ஜில்லாவில் இருக்கக்கூடிய கையேர், மாட்டு வாரம்தாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சம்பந்தமாகக் கொண்டுவரும் போது மற்ற எல்லா ஜில்லாக்களிலும் இருக்கும் சிறு நிலச்சுவாந்தார் களுக்கும் கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கையில் எல்லோரும் இருந் தார்கள். அப்படியே கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை பலருக்கு இருந்தது உண்டு. இதன் மூலம் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு கஷ்டம் பூராவும் தீர்ந்து விடபோவதில்லை. திருச்சி ஜில்லாவிலுள்ள சிறு நிலச் சுவாந்தார்களுக்குக் கொண்டு வருவதனால் மற்ற ஜில்லாக்களிலுள்ள சிறு நிலச்சுவாந்தார்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து விடும்

என்பதும் இல்லை. ஆகவே, அவர்களுடைய கஷ்டங்கள் எல்லாவற்றையுமே தீர்ப்பதற்கு என்று ஒரு விரிவான சட்டத்தைக்கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு அதையும் சமீப காலத்தில் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டு வந்து ஏழை எளிய விவசாயிகளையும், சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளையும் காப்பாற்றவேண்டும். இப்படி விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு மசோதாவை அரசாங்கம் சமீப காலத்தில் கொண்டு வந்து நிறைவேற்றும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட நம்பிக்கையும் விவசாயிகளிடத்தில் இப்பொழுது இருந்து வருகிறது.

திருச்சி ஜில்லாவில் பரஸ்பரம் நம்பிக்கை குறைவு, பரஸ்பரம் பயம் காரணமாக எழுந்த நிலை, ஒருவருக்குள் ஒருவர் இருந்து வரும் மனப் பான்மை கஷ்டங்கள், இவைகளைத் தவிர்ப்பதற்கு ஒரு நல்ல எண்ணத்து டன் அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த கையேர், மாட்டு வாரம் மசோதாவை ஏழை, எளிய விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னதாகவேகொண்டு வரப்பட்டது. ஆனால் நீதி ஸ்தலத்தில் ஏற்பட்ட முடிவின் காரணமாக, அவசர அவசரமாக வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப் படிப்பட்ட ஒரு சட்டத்தையும் இந்த அரசாங்கம் இந்த வருஷ ஆரம்பத்தி லேயே கொண்டு வந்து, அதில் இதைப்பற்றி விளக்கமாக தெரிவித்தார்கள். ஏழை, எளிய விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவில் ஷரத் துக்கள் அமையவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்துடன் அந்த அடிப் படையில் இந்தச் சட்டத்தை அரசாங்கம் இப்பொழுது கொண்டுவந்திருக்கிறது.

ஆகவே இப்பொழுது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவின் மூலமாக ரெவினியூ அதிகாரிகளுக்கு அவர்களுடைய வரம்புக்கு உட்பட்ட அதிகாரங்களையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அதிகப்படியாக, ஒரு வரம்புக்கு மீறிய, அதிகாரத்தை ஹைக்கோர்ட்டுக்கு விடப்பட்டிருக் கிறது. கீழே அதிகாரங்கள் எந்த அளவில் இருக்கவேண்டும் என்பதை நிர்ணயம் செய்து அதன் மேல் இருக்கக்கூடிய அதிகாரத்தை ஹைக்கோர்ட்டு டுக்கு விடப்பட்டிருக்கிறது. கீழே இருக்கக்கூடியவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் பிரயோகிக்கப்படும்போது ஏதாவது சிரமங்கள் அல்லது சாதா ரண சிக்கல்கள் ஏற்பட்டால் அவைகளை தவிர்க்க ஹைக்கோர்ட்டுக்குச் செல் வதற்கும் இதில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே விவசாயிகள் ஓடோடியும் கோர்ட்டுக்குப்போகாமல் இருப்பதற்கு ஆரம்ப காலத்திலேயே அங்கங்கே இருக்கக்கூடிய தாலூகா தாசில்தார், ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் முதலிய ரெவின்யு அதிகாரிகளிடத்திலேயே தங்களுடைய தக ராறுகளை தீர்த்துக்கொள்வதற்கும் இதில் வசதி செய்து கொடுக்கப்பட்டி ருக்கிறது. அந்த முறையிலும் இது வரவேற்கதக்க மசோதாதான். சட்ட ரீதியாக பிரச்னைகள் எழும்போது அவைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஹைக்கோர்ட்டுக்குப் போவதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை கவனித்தால் உண்மையிலேயே இது ஒரு நல்ல மசோதாவாகத் தான் அமைந்திருக்கிறது. "பாக்ட்ஸை" ப்பொறுத்த வரையில் அங்கங்கே நிகழக்கூடிய உண்மையைக் கண்டுபிடித்து அதற்கு முடிவு காண்பதற்கு லோகல் ரெவினியு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க வழிவகையும் செய்யப்பட்டிருக்கிறது. சட்ட ரீதியாக பிரச்னைகள் வரும் போதுதான் அதை ஹைக்கோர்ட்டுக்கு எடுத்துப்போவதற்கு வசதியாக வகுக்கப்பட்டிருக்கிறது. பலர் பேசும்போது ஹைக்கோர்ட்டுக்குப்போக வேண் டும் என்று சொல்லியிருப்பதால் பல சிக்கல்கள் ஏற்படலாம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு இடமே இல்லை. அங்கங்கே இருக்கக்கூடிய தாசில்தார்கள், ரிவினியு டிவிஷனல் ஆபீசர்கள், இவர்கள் அங்கு எழக் கூடிய தகராறுகளை நல்ல முறையில் பரிசீலனை செய்து அதற்கு பரி காரம் தேடிக்கொடுப்பதற்கு வழி செய்யப்பட்டிருப்பதால் எல்லா தகராறு களும் ஹைக்கோர்ட்டுப் போகவேண்டிய அவசியமே இல்லை, அவசியமும் ஏற்படாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இந்த மசோதாவில் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு நிலைமை திருச்சி ஜில்லாவில் இருப்பது போன்று திருநெல்வேலி ஜில்லாவிலும் ஒருவிதமான விவசாயம் இருந்து வருகிறது. அதைப்போன்று மற்ற ஜில்லாக்களிலும் இருக்கின்றன. விவசாயிகளைப் பொறுத்தமட்டில் திருச்சியில் ஏற்பட்டிருக்கக்கூடிய பயத்தின் காரணமாக கையேக, மாட்டு வாரம் மசோதா வந்திருக்கிறது. இதைப்போன்று வெவ்வேறு ஜில்லாக்களில் வெவ்வேறு விதமான பயம் ஏற்பட்டு வருகிறது. அவைகளுக்கு எல்லாம் ஒரே மாதிரியான ஒரு விரிவான சட்டம் கொண்டு வரவேண்டியது அவசியமாக இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கக்கூடிய பேத்து வார முறைக்கும் மற்ற ஜில்லாக்களில் இருக்கக்கூடிய வார முறைக்கும் வித்யாசம் இருக்கிறது. ஆகவே எல்லாவற்றையும் ஒரே அடிப்படையில் கொண்டு வருவதற்கு சாத்தியப்படாது. காலாகாலத்தில் ஒரு விரிவான சட்டம் கொண்டு வந்து சிறு நிலச்சுவாந்தார்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் நியாய வாரச் சட்டம், நிலச்சீர்திருத்தச் சட்டம், முதலியவைகளைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். அதைப் போலவே இந்தச் சட்டத்தைக்கொண்டு வரும்போது நல்ல முறையில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த விதமான அபிப்பிராய பேதமும் ஏற்படாத வகையில், எந்த விதமான பங்கமும் ஏற்படாத அளவில் வெகு ஜாக்கிரதையாக இதைக்கொண்டு வர வேண்டும். சிறு நிலச்சுவாந்தார்களுக்கு பயம் ஏற்படக்கூடிய அளவுக்கு இதை விட்டு விடக்கூடாது என்ற அடிப்படையில் இந்த மசோதாகொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இந்த மசோதாவின் மூலமாக விவசாயிகளுக்கு தக்க பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. பத்து எக்கருக்கு மேலே நிலம் வைத்து இருக்கக்கூடிய விவசாயிகளிடத்தில் வேலைசெய்யும் மாட்டு வாரம்தாரர்களுக்கு கல்டிவேட்டிங் டெனண்ட்ஸ் ப்ரொட்டெக்ஷன் ஆக்ட் கீழும், நியாய வாரச் சட்டத்தின் கீழுமுள்ள பாதுகாப்பும் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் இவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 எக்கருக்கு உட்பட்ட நிலச்சுவான்களுக்கு சிறு விலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. கையேர், மாட்டு வாரம்தாரர்கள் என்ன வேலை செய்கிறார்கள் ? மற்ற விவசாயிகள் பல வேலைகளைச் செய்வது போன்று இவர்களும் சில வேலைகளைச் செய்கிறார்கள். மாட்டு வாரம்தாரர்கள் சில வேலைகளைச் செய்கிறார்கள். பல வேலைகளில் ஒரு பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையில் இருப்பதால் பத்து எக்கருக்குக் குறைவாக வைத்திருக்கும் மத்திய தர விவசாயிகளுக்கு தாக்குப் பிடிக்க முடியாத கஷ்டம் ஏற்படுத்தவேண்டாம். அதற்கு மேற்பட்டவர்கள் வேண்டுமானால் தாக்குப் பிடித்துக்கொள்ளலாம். பத்து எக்கருக்குக்கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கு மூன்று எக்கர் வரையிலும் விலக்குக் கொடுக்கலாம். பத்து எக்கர் வரையிலும் நிலம் வைத்திருக்கின்றவர் தங்களுக்கு இஷ்டமான மூன்று எக்கருக்கு விலக்கு பெறலாம் என்பது நியாயமான பாதுகாப்பு. பத்து எக்கருக்கு உட்பட்டவர்களுக்கு என்ன முறைப்படி
3-10 p.m. ஒரு அமைப்பு வைத்துக்கொள்ளவேண்டும். எந்த அளவு விகிதாச்சாரம் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri A. R. MARIMUTHU**: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த மசோதா விவசாயிகளுக்கும், சாகுபடியாளர்களுக்கும், நிலச்சுவாந்தார்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூய, குறிப்பாக திருச்சி ஜில்லாப் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய, ஒரு நிலைமையை தவிர்ப்பதற்காக, பல முயற்சியின் பேரால் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவிலே பல அம்சங்கள் இருந்தபோதிலும் குறிப்பாக அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய எல்லா கஷ்டங்களையும் இந்த மசோதா போக்கிவிடும் என்று சொல்வதற்கு இல்லை. பத்து எக்கருக்குக் குறைவாக இருக்கக்கூடிய மிராசுதாரர்களின் கீழ்உள்ள மாட்டு வாரம்தாரர்களுக்கும் சாகுபடியாளர்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய உரிமைகள் கிடைக்காமல் போகிறது. பத்து எக்கருக்கு மேற்பட்டு நிலம்

29th October 1958] [Sri A. R. Marimuthu]

வைத்திருப்பவர்களிடத்திலே மாட்டு வாரச் சாகுபடி செய்கின்றவர்கள் " கல்ட்டிவேடிங் டெனண்ட் " ஆக கருதப்படுகிறார்கள். அதே சந்தர்ப்பத்தில், பத்து ஏக்கருக்கு உட்பட்டவர்களிடத்திலே சாகுபடி செய்கின்ற மாட்டு வாரம்தாரர்களை நியாய வாரச் சட்டத்தின்படி வாரம் கொடுக்கவேண்டியதில்லை. நிலச் சொந்தக்காரர்களுக்கும், சாகுபடிக்காரர்களுக்கும் எந்த முறையிலே ஒப்பந்தம் இருக்கிறதோ அந்த பழைய ஒப்பந்தப்படியே வாரம் செலுத்தவேண்டுமென்று இருக்கிறது. இம்மாதிரி பழைய முறையை அப்படியே வைத்து, நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது என்ற உரிமையையும் அவர்களுக்கு அளித்து, பழைய முறைப்படியே அவர்கள் வாரம் கொடுத்து வரவேண்டும் என்று இருக்கிறது. அந்த ஜில்லாவிலே இடத்திற்கு இடம் மாறுபட்ட வார விகிதாசாரம் இருப்பதாக நாம் அறிகிறோம். அம்மாதிரி மாறுப்பட்ட விகிதாசாரம் இருப்பதால், அங்கே சாதாரண விவசாயிகளுக்கும் பத்து ஏக்கருக்கு உட்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கும் வம்பு விளையக்கூடிய நிலைமை ஏற்படுமே யொழிய இந்த வம்பு குறைந்ததாக இருக்கமுடியாது. திருச்சி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்கே பத்து ஏக்கருக்கு உட்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். பத்து ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கக் கூடியவர்கள் மிகக் குறைந்தவர்கள். பத்து ஏக்கருக்கு உட்பட்ட நிலச் சொந்தக்காரர்களிடம் மாட்டு வாரந்தாரர்களாக வேலைசெய்யக்கூடியவர்கள் மிக அதிகமாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் கிடையாது. பத்து ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருக்கும் மத்திய தர விவசாயிகளுக்கும் கஷ்டம் ஏற்படக் கூடாது என்ற காரணத்தால், விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலுங்கூட, முந்தியிருந்த மாட்டு வார முறையை அப்படியே வைத்துக்கொண்டு, அந்த முறைப்படி சாகுபடி செய்கின்றபோது இன்ன விகிதாசாரம் கொடுக்க வேண்டும் என்று சட்டத்திலே வரையறுத்துவிடவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி வரையறுக்காவிட்டால், நிலச் சொந்தக்காரரும், சாகுபடியாளரும் அடிக்கடி கோர்ட்டுக்குப் போய் அலையவேண்டிய நிலைமையும் ஏற்படும். நிலத்திலே ஊக்கமாக சாகுபடி செய்யவேண்டிய எண்ணம் ஏற்படாது. நிலச் சொந்தக்காரருக்கும் மத்தியதர சாகுபடியாளருக்கும் அடிக்கடி வம்பு ஏற்பட்டு கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தடுப்பதற்கு இதில் ஒரு வரையறை ஏற்படுத்த வேண்டும்.

கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் சட்டப்படி ஒரு நிலத்தைச் சாகுபடி செய்கின்றவர் என்ன செய்யவேண்டுமோ அதற்கும், மாட்டு வாரம்தார்கள் என்ன செய்யவேண்டுமோ அதற்கும் என்ன வித்தியாசம் ? ஒன்றில் விதையையும் எருவையும் நிலச் சொந்தக்காரர் கொடுக்கிறார். மற்றொன்றில் விதையும் சேர்ந்து சாகுபடியாளர் கொடுக்கவேண்டும். அதுதான் வித்தியாசம். அதற்குத் தகுந்தபடி 60 : 40 விகிதாசாரத்துக்குப் பதிலாக ஏதேனும் வார விகிதம் ஏற்படுத்தி, வறையறை ஏற்படுத்தினால்தான் சௌஜன்யமான முறை ஏற்படும். அதைக்கருத்தில்கொண்டு அந்த முறையிலே திருத்தங்கள் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member Sri M. Jagannathan may now speak. I am not fixing any time-limit.

* SRI M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, I wholeheartedly welcome this Bill. While welcoming this Bill I wish to congratulate the Government in general and the Hon. Minister for Revenue in particular because, after pursuing a policy of dilatory tactics—putting it in a very technical term, after following the policy of procrastination—the Government had thought it fit and necessary at least now to bring forward this piece of legislation. Sir, this morning spirited speeches were made by the hon. Member

hailing from Lalgudi and the hon. Member hailing from Gobichettipalayam advocating that htis Bill must be shelved. (Hon. Members : Ailing from . . .)

MR. SPEAKER : Is it " hailing " or " ailing ". " Ailing " is out of order.

SRI M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, I was saying hailing and not " ailing ".

SRI P. G. KARUTHIRUMAN : Spelling-ஐகொஞ்சம் நன்றாகச் சொல்லி விடுங்கள்.

* SRI M. JAGANNATHAN : The hon. Member is not in a position to understand the spelling.

Sir, they were advocating that there was no urgency for a legislation of this type and that it should be shelved for another couple of months. If we read the preamble of the Bill we will see that the position is fairly and clearly stated. The preamble of the Bill reads :

" Certain peculiar kinds of relationship in respect of land, called kaiaeruvaram and mattuvaram, are prevlent in certain areas of the Tiruchirappalli district. The uncertainties regarding the incidents of those relationships have led to frequent disputes between the landowners and the kaiaeruvaramdars and the mattuvaramdars, leading to unsettled conditions and breaches of peace and causing fall in agricultural production ".

This clearly shows that in the area referred to, grave conditions exist, that there is disturbance to peace and tranquility which hampers agricultural production as such. Therefore, Sir, when those hon. Members advocated that this Bill should be shelved or that the consideration of it should be postponed for another two months, I was not in a position to understand, in fact I was at a loss to understand on what rational basis they pleaded for the postponement of the consideration of the Bill.

Sir, I understand that most of the kaiaeruvaram and Mattuvaramdars happen to belong to the Harijan community. In fact, cent per cent of them are Harijans and it is a fact that from time immemorial these landless masses have been exploited by the land-owning classes. It is high time that the Government should come forward in order to protect their legitimate rights and interests. Therefore I congratulate the Government once again for having brought forward this piece of beneficial legislation in the interest of the vast majority of the Harijan masses who form the peasentry in the Tiruchirappalli district.

While I congratulate the Government in these terms, I wish also to point out a serious defect in one of the provisions of the Bill. There is a sort of invidious distinction made between the kaiaeruvaramdars and mattuvaramdars. Mattuvaramdars are accorded the status of cultivating tenants whereas the kaiaeruvaramdars are denied that status. They are only given the status of the

pannaiyals which means that this Bill condemns a particular class of cultivators to the position of farm servants and in fact to that of slaves under the land-owning class. This is a very unhappy position and the Government should come forward in order to remedy this defect and give them the status of cultivating tenants. I do not know why on earth the Government thought it necessary to change from the position originally taken by them when the ordinance was first promulgated. In the ordinance they gave these kaiaeruvaramdars also the status of cultivating tenants. But in between the time, that is, the promulgation of the ordinance for the purpose and the presentation of this Bill, they have changed over from the original position, to the present position, namely, that these kaiaeruvaramdars are condemned to the position of pannaiyals which means veritable slavery under the land-owning class. This has to be remedied at the earliest possible opportunity. Whatever might have been the pleadings of the two hon. Members coming from Lalgudi and Gobichettipalayam, I hope the Bill will not be shelved or the consideration postponed but will go through with the amendment I have suggested.

Thank you, Sir.

* Sri R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, while I support the general principles of this Bill, I desire to point out certain defects which must be remedied if the relationship between the landlord and the tenant must continue to be cordial. The maintenance and furthering of such amicable and cordial relationship between them is the *sine qua non* of increased production. The more we interfere with the relationship of these people, either because of agitation by the kaiaeruvaramdars or mattuvaramdars, or somebody else, the less will be the production of foodcrops. This is not my statement. It is the statement made by eminent men, including Ministers of States as well as the Centre.

Sir, this legislation started with the Ordinance I of 1958. That culminated in the L.A. Bill No. 1 of 1958. That Bill was dropped after a special enquiry by a Revenue Officer of very high rank, Sri T. N. S. Raghavan, after spending considerable time on considering it. The Select Committee appointed to consider that Bill decided to drop it as originally published.

I refer my previous speaker, Mr. M. Jagannathan, to the almost unanimous report of the Select Committee which wanted that the Bill should be dropped. We are now concerned with a fresh legislation. My hon. Friend, Mr. Annamalai was the only dissenting Member in that Committee and his dissenting minute did not really relate to the proposed legislation. 3-20 p.m.

Sir, in this Bill, the position of the kaiaeruvaramdar and mattuvaramdar is defined. But I respectfully submit for the consideration of the House and the Government that the tenure or the relationship or the contract between the parties as it stood on 1st January 1957 should not be affected. This legislation tries to give restoration of

status retrospectively either to the kaiaeruvaramdar or mattuvaramdar. The actual position existing there has not been considered. There is the report of the Revenue Officer. The terms of contract are different in different villages. Originally we proposed to legislate for 28 villages, but now we are doing it for 40 villages. I hope, perhaps, this will be the last time when we will be legislating for a few villages and we will not do it for single village or a single person.

Sir, the relationship between the owner and the person engaged for cultivation is different in different villages. The proper course we have to adopt, the proper perspective with which we must view this legislation is that it should not be disturbed. Well, we wanted to give them protection. We must give protection. But to give retrospective status under which they were cultivating their lands on 1st January 1957 is not reasonable. It happened because of foreign interference. Third party interfering with the relationship between the cultivator and the owner is to be deprecated to say the least, and the result of it will be inefficient cultivation.

In this respect I desire to point out that instead of giving merely protection, fixity of tenure, fixity of engagement, fixity for a period of years, we are introducing new difficulties which will only drive these parties to court further. So far as their relationship is concerned, that has to be ascertained. It has already been ascertained by Mr. T. N. S. Raghavan and his report is available. Any Revenue Official, a Tahsildar or so, will be able to fix that relationship and the proper procedure will be to restore that position. Where he was already engaged, he must continue to be engaged. When these are all done, what is to happen to the crops on the lands? It may take some more months for harvest. How is that to be shared, if we restore the mattuvaramdar to the position of cultivating tenant under the Fair-rent Act? What is to happen to the cost already incurred by the landowner? Therefore, the proper procedure will be to restore him to his old position only after the harvesting of the present crop is over. Possibly, the harvest will be over by 1st April next.

The next point I wish to refer to is in regard to this notice to be given to the kaiaeruvaramdar. In section 4, 12 months' notice is provided for. It is very wonderful. Normally, if the cultivation has to begin on the 1st May and if the contract has to be terminated, it can be done only on the 1st May next year. If such a notice is given in the middle, will there be proper cultivation? Cultivation will suffer, production will suffer. One week's notice or at the most three months' notice should be enough and it should be given as soon as the harvest is over. Otherwise the relationship between the landowner and the prospective dismissed servant will not be conducive to proper cultivation and production of food crops.

The next point I should like to refer to is that agricultural year has not been defined, and in section 3 we specify the remuneration payable as per Schedule II for his work during a crop season and

in Schedule II, it has been stated that it shall be 45 measures per month for a period of not less than four months. Here we have not separated the man who is ploughing and the man who is watering. The work has to be done from the day of raising the seedling till transplantation. This has to be considered before we fix the wages. To say that he should be paid for four months is not quite reasonable. The wages of the Tanjore pannaiyal are, some paddy per day of work and one-seventh of the produce for harvesting, etc., as per the Act in Tanjore. This includes *Kalavadi*, *Sattuvoi*, etc., which are undefinable things which are being given freely. Because of the Act, all these troubles have arisen. Therefore, when there is a dispute, it has got to be defined. But at the same time we must not create new difficulties. The Kuruvai crop is harvested in three months or 90 days. For this crop, are we to pay the man for four months? Then again, the samba crop and the third crop greengram, gingelly, etc., they are of longer and of shorter duration. In these cases, he is not only pannaiyal for a particular period, but he is pannaiyal for the whole year. In these cases also, is he to be paid four months' wages plus one-seventh of the produce? I have no objection to give him protection, but at the same time we should not create new difficulties. In these cases the kaiaeruvaramdar has to be defined for each case. Therefore, the proper procedure will be just to adopt a provision similar to section 7 (*b*) for kaiaeruvaramdar.

Sir, one thing more. For ploughing by the kaiaeruvaramdar the landowner supplies the bulls. The cultivation season is distributed over a period of two months, depending on the age of the seedlings. Supposing a man ploughs 1 acre here, 2 acres there and 3 acres in another place belonging to different owners, he will get wages from each owner and share from each land. Is that the idea. I do not think it is so. Therefore, let us legislate clearly. Let us not get the appreciation or stigma of doing this or not doing that. Let us not be charged again by the High Court that we legislated in a haphazard and hasty way. I thought this Bill would go before a Select Committee. But it is not going and therefore I request that at least at the time when clause-by-clause consideration is taken up, these points may be borne in mind.

Apart from these, I want to make it clear that I am not one against tenancy reform. Let us have fixity of tenure, let us have fixed and unalterable wages. But the conditions of pannaiyal are different in different villages. In one village the wages may be Rs. 2 while in another village for the same labour it may be As. 10 or 12. It depends on demand and supply of labour. We are now trying to legislate for more than 40 villages. While we do that, let us not do anything that will hamper production of food crops and contribute to inefficient cultivation. Let us not be carried away by the slogan ' soil for the tiller '. These are slogans of particular sets of people who do not know the real conditions existing in villages. Let us do things which will help to create proper relationship between the owner and the tenant, without creating new difficulties and without creating a hitch.

3-30 p.m. The other point that I wanted to raise was about the limit 10 acres and more. A person who owns 10 acres or more, is not entitled to get 3 acres. Why there should be this limit? Three acres is a very small, paltry extent which a man can cultivate personally. Even if a man owning 100 acres, as was put by a Minister of State or the Centre, wants to cultivate well and get a good yield we must help him. A man owning 10 acres may like to cultivate 3 acres for his own use. The Fair Rent Act enables the tenant to carry away the harvest and the landowner has to apply for fixing the fair rent which will be done on an average of five years and after the harvest is over. Meanwhile, the tenant takes away the produce. The landowner will have to go to the court and then there will be delay. There will be then trouble also. How do you give fixity of tenure? It must be made clear in the Act, that the crop is harvested and divided on the threshing floor. A general statement that the landowner will get all the rents which he is entitled to get under the Fair Rent Act, will not do. Therefore, the proper perspective will have to be that the mattuvaramdar must be necessarily compelled to do all the cultivation operations. Then only he can get the produce divided on the ratio of 60 and 40. We have not defined this either in the Cultivating Tenants Protection Act or in the Cultivating (Payment of Fair Rent) Act. We have not said anything about this in this Bill except a general statement that all the sections of the Cultivating Tenants (Payment of Fair Rent) Act and the Cultivating Tenants Protection Act, apply to these persons also. Therefore, it is better that we take a little more time to consider the clause by clause consideration of this Bill and amend it as suitably as possible to create a smooth atmosphere in the 40 villages in the Tiruchirappalli district so that the relationship between the people who work on the land and the owner of the land will not be strained and also that food production may increase as is adumbrated in the preamble to this Bill. Thank you, Sir.

*SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கை ஏர் வாரம்தார், மாட்டு வாரம்தார் இவர்கள் சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்ட மசோதாவை அரசாங்கம் அதிக கவனத்தோடு ஆராய்ந்து தான் கொண்டு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகையால்தான் ஒரு பொறுக்குக் கமிட்டி அமைத்து, அதற்கு மேல் ஒரு அதிகாரியை அந்த ஜில்லாவிற்கு அனுப்பி, அங்குள்ள சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, பின்னர் அவர் திரும்பி வந்து அவர் தெரிவித்த நிலைமையின் பேரில், பிறகு எந்த வகையிலே இந்த மசோதாவைக்கொண்டு வரலாமோ அந்த வகையிலே நன்கு யோசித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்வளவு ஆழ்ந்த யோசனைகளுக்குப் பிறகு கொண்டு வந்தும் அதிலே இருக்கும் ஒரு சில குறைகளைப் பார்க்கும்போது உண்மையிலேயே இந்த மாட்டு வாரம்தார்கள் கை ஏர் வாரம்தாரர்கள் பிரச்னையிலுள்ள குழப்பத்தைத் தீர்ப்பதற்கு பதிலாக இன்னும் குழப்பத்தை உண்டுபண்ணுவதோடு, மிக மிக அவசியமான உணவு உற்பத்தியையும் பாதிக்குமோ என்று யோசித்து இதை வரவேற்கவேண்டியிருக்கிறது.

முன்பு பேசிய அங்கத்தினர் சொன்னது போல 40 கிராமங்களுக்காகவும், 4 ஊர்களுக்காகவும், 4 அங்கத்தினர்களுக்காகவும் ஒரு சட்டம் கொண்டு வந்தால் சட்ட சபையின் முக்கியத்துவம் மிகவும் பாதிக்கப்படும் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட மசோதாவை ஆங்கிலப் பாராளு

29th October 1958] [Srimathi T. N. Anandanayaki]

மன்றத்திலே "ஹைபிரிட் பில்" என்று கூறுவார்கள். இத்தகைய "ஹைபிரிட் பில்களில்" அதிக கவனம் செலுத்தினால் மிக மிக முக்கியமான மசோதாவின் மீது அதிக கவனம் செலுத்தும் சூழ்நிலையில்லாமல் போய் விடும். ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு ஊருக்கும் சட்டம் கொண்டு வருவதை இத்துடனாவது நிறுத்திவிட்டு தமிழ் மாகாணம் பூராவிலுமுள்ள சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, அடிப்படையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதில் கவனம் செலுத்தினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

இப்போது இந்த மாட்டு வாரம்தாரர்களுக்கும், கை ஏர் வாரம்தாரர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதனால் நிலச் சொந்தக்காரர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள உறவு முறிக்கப்படுவதோடு உணவு உற்பத்தியானது பாதிக்கப்படும் என்று பலர் கூறியிருக்கிறார்கள். இதை யோசித்துப் பார்க்கவேண்டும். உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டால் அது நாட்டுப் பிரச்னையாக ஆகிவிடும் என்ற நிலையைப் பார்க்கவேண்டும். அந்த வகையிலே கை ஏர் வாரம்தாரர்களுக்கும் மாட்டுவாரம்தாரர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க ஒரு சட்டம்கொண்டு வரவேண்டுமென்று யோசித்தோமோ, அதனால் பழைய தொல்லைகள் போய் புதிய தொல்லைகள் வருமோ என்று அஞ்சுகிறேன். அதை அரசாங்கம் யோசித்து, ஆர அமர சிந்தித்து, ஆர்டினன்ஸ் போட்டு இவ்வளவு தொல்லைகளுக்கு ஆளான மாதிரி, இன்னும் புதிய தொல்லைகளை உற்பத்தி செய்யாமல் ஓரளவுக்கு எல்லோருக்கும் நியாயமான நல்லதொரு சட்டத்தைப் போடுவது நல்லது என்று எண்ணுகிறேன்.

கை ஏர் வாரம்தாரரை நிர்ணயிக்கும்போது இந்தச் சட்டத்திலே, விளைகிற பொருளிலே பங்கு பெறுகிறவன், இல்லாவிட்டால் நெல்லைக் கூலியாகப் பெறுகிறவன், இல்லாவிட்டால் இரண்டையும் பெறுகிறவன் என்று போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பண்ணையாளும் இதிலே வர முடியும். கை ஏர் வாரம்தாரர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க எண்ணும்போது, இதனால் ஒவ்வொரு புதிய பண்ணையாளும் இதன் கீழ் வர முடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு பண்ணையாளுக்கும் கூலியை நெல்லாகக் கொடுக்கிறார்கள். இந்தக் கை ஏர் வாரம்தாரர்களுக்கு கூலியாக நெல்லைக் கொடுக்கிறார்கள் என்பதற்காக இந்த மாதிரி போடுவோமானால் இது புதிய தொல்லைகளைக் கிளப்பக் கூடியதாக இருக்கும். ஒரு சில இடங்களில் நெல்லாகக் கூலியை கொடுக்கிறார்கள் என்று நாம் அனுப்பிய நிபுணர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு சிலருக்காகச் செய்யப்போய் அதுவே பலருக்கு பாதகமாகக் கூடிய சூழ்நிலையை உண்டு பண்ணக் கூடாது. அப்படிப்பட்ட தொல்லைக்குக் கொண்டு வரக் கூடிய "டெபெனிஷனை"-ப் போடாமல் இருந்தால் நல்லது. ஆகவே இதை அரசாங்கம் யோசித்துப் தக்கபடி திருத்தினால் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த கை ஏர் வாரம்தாரர்கள், மாட்டு வாரம்தாரர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் காரணம் அவர்களை வெளியேற்றுகிறார்கள் என்பதுதான். திருச்சியில் பெரிய பண்ணைகளில் வெளியேற்றல்கள் நடந்ததால் அதைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது இந்த மசோதா. அதுவே சிறு நில விவசாயிகளுக்குத் தொல்லையாக—அவர்களுக்கும் கை ஏர் வாரம்தாரர்களுக்கும் இடையே நெருக்கடியை உண்டுபண்ணுவதாக—அமையக்கூடாது. இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் பெரிய மிராசுதார்கள் கீழ்ப்படிந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பார்கள் என்று அரசாங்கம் கொண்டுவந்திருக்கிறது. அதை வரவேற்கிறேன். பாதுகாப்பு கொடுக்கப்போய், அதுவே பெரிய பிரச்னையாகி குழப்பமாகி விட்டால் உழவு பாதிக்கப்படும். உழவு பாதிக்கப்பட்டால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும். உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த நிலைமையை மிகமிக யோசித்து கவனத்தோடு இந்தச் சட்டத்தை நிறைவேற்றவேண்டும்.

[Srimathi T. N. Anandanayaki] [29th October 1958

மூன்றாவது பிரிவிலே கூலியை நிர்ணயித்திருக்கிறார்கள். இவர்களுடைய கிளர்ச்சி கூலியைப்பற்றியதேயல்ல. அவர்களுடைய கிளர்ச்சியெல்லாம் பாதுகாப்பு வேண்டுமென்பதுதான். கிளர்ச்சி பாதுகாப்பு வேண்டுமென்று இருக்கும்போது கூலியைப்பற்றி நாம் நிர்ணயம் செய்தால் இது இன்னும் பெரிய கிளர்ச்சியில் கொண்டுபோய்விடும். இங்கு குறிப்பிட்டிருக்கிற தாலூக்காக்களிலே, ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு விதமாக இருப்பதாக பொறுக்குக் கமிட்டியில் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு பகுதியில் ஆறில் ஒரு பங்கு, ஒரு பகுதியில் ஐந்தில் ஒரு பங்கு, ஒரு பகுதியில் ஏழில் ஒரு பங்கு என்று இப்படி வெவ்வெறு விதமாக கூலி இருக்கிறது. இரண்டாவது ஷெட்யூலில் கை ஏர் வாரம்தாரர்களுக்கு நான்கு மாதங்களுக்குக் குறையாத கால அளவுக்கு விவசாயம் நடக்கிற காலத்தில், மாதம் ஒன்றுக்கு நாற்பத்து ஐந்து பட்டணம் படி நெல் கொடுத்து, விளைச்சலில் ஏழில் ஒரு பங்கு என்று சொல்லியிருப்பது பெரிய மிராசுதார்களை வேண்டுமானால் பாதிக்காமல் இருக்கலாம், ஆனால் சிறிய மிராசுதார்களின் கதி என்ன ஆவது ? பெரிய மிராசுதார்கள் இரண்டில் ஒரு பங்கு கூட கொடுக்கலாம். சிறிய மிராசுதார்களை இது மிகவும் பாதிக்கும். 3 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்குத்தான் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 5 ஏக்கர், 7 ஏக்கர் நிலங்கள் வைத்திருப்பவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கதி என்ன ஆவது. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்பது பழமொழி. கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு போடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய தொழில்கள் விஷயத்தில்கூட இன்னும் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கும்போது, கை ஏர் வாரம்தாரர்களிடையே பல தரப்பட்ட பழக்க வழக்கங்கள் இருக்கும்போது இப்படி ஒரு கூலி நிர்ணயம் செய்து "இவ்வளவு கொடு" என்று சொன்னால் புதிய தொல்லைகளை வரவேற்பதாகாதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். கைஏர் வாரம் தாரர்கள், மாட்டுவாரம்தாரர்கள் விஷயத்தில் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்பது பிரச்னையல்ல. "கை ஏர் வாரம்தாரர்களை வெளியேற்றாதே" என்பதுதான் அவர்களுடைய பிரச்னை. அதைத் தீர்ப்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்வது நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். அதை விட்டு, கூலி நிர்ணயம் செய்ய ஆரம்பித்து புதிய பிரச்னைகளைக் கிளப்பிவிட்டு நிலச்சுவாந்தாரர்களுக்கும், மாட்டு வாரம் தாரர்களுக்கும், கை ஏர் வாரம்தாரர்களுக்கும் தொல்லைகளை உண்டாக்குவதில் கவனம் செலுத்தாமல், பழக்க வழக்கத்தில் இருப்பது போலவே ஆறில் ஒரு பங்கோ, ஏழில் ஒரு பங்கோ, ஐந்தில் ஒரு பங்கோ என்று இருப்பதை அப்படியே விட்டு வைத்தால் புதிய தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும். இதனால் நிலச்சுவாந்தார்களுக்கும் தொல்லையில்லாமல் இருக்கும். இதனால் உணவு உற்பத்திக்கு பாதகம் ஏற்படாமலும் இருக்கும்.

அடுத்தபடியாக நிலச்சுவாந்தார் ஒரு கை ஏர் வாரம்தாரரை நீக்கவேண்டுமென்று சொன்னால், ஒரு வருஷ நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு தொழிலாளியை வேலையை விட்டு நீக்கவேண்டுமானாலே ஒரு மாத நோட்டீஸ்தான் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது, மிராசுதார்கள் ஒரு வருஷ நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றுசொன்னால், இது எவ்வளவு தொல்லைகளில்
3-40 p.m. கொண்டுபோய் விடுமென்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். ஏனென்றால் எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் சொன்னமாதிரி ஒரு வருஷத்திற்கு முன்னரே நோட்டீசைக் கொடுத்தால், உணவு உற்பத்தி பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், மிராசுதாருக்கும், தொழிலாளிக்கும் உள்ள உறவு பாதிக்கப்படும். அதனால் புதிய தொல்லைகள் ஏற்படும். விவசாயக் குற்றத்தோடு மட்டுமல்லாமல், பீனல் கோடிலே இருக்கிற குற்றங்களைச் செய்ய கூடத் தோன்றும். ஆகவே, அவ்வளவு நீண்டகாலத்தைக் கொடுக்காமல் இருப்பது நல்லது. அறுவடை காலம் முடிந்த பின்னர் நேரம் இருக்கிறது. கையேறு வாரம்தார் வேண்டுமா, அல்லது வேண்டாமா என்பதை யோசிக்க 3 மாதமோ அல்லது 4 மாதமோ இருந்தால் போதும். அதிகபட்சம்

29th October 1958] [Srimathi T. N. Anandanayaki]

6 மாதம் கொடுத்தால் போதுமானது. பன்னிரண்டு மாதங்கள் கொடுத்திருப்பது உகந்தது அல்ல. நான்காவது பிரிவிலே, பரஸ்பர ஒப்பந்தத்தின் பேரில் உடன்படிக்கையை இறுதி செய்யலாமென்றும், நிலச் சொந்தக்காரர் உடன்படிக்கையை இறுதி செய்தால், நிர்ணயிக்கப்பட்ட நஷ்ட ஈட்டை அல்லது பரஸ்பரம் ஒப்புக்கொள்ளக்கூடிய தொகையைக் கை ஏர் வாரம்தாரருக்குக் கொடுக்கவேண்டுமென்றும் இருக்கிறது. மிராசுதாரரும், கை ஏர் வாரம் தாரரும் ஒப்புக்கொண்டு, " உன்னிடம் நான் வேலை செய்யவில்லை " என்ற முடிவுக்கு வந்தால், தண்டனை விதிப்பது போன்று, நிலச்சுவான்தார்கள் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று சொல்லுவது வரவேற்கத்தக்கதன்று. **It will amount to discrimination** ஒரு சாராரை ஒரு விதமாகப் பார்ப்பதும், மற்றொரு சாராரை இன்னொரு விதமாகப் பார்ப்பதுபோல, பாரபட்சத்தை உண்டுபண்ணக்கூடிய வகையிலிருக்காதா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்கவேண்டும். பெரிய மிராசுதார்கள் நஷ்ட ஈடு கொடுக்கமுடியுமென்றாலும், சிறிய நிலச்சுவான்தார்களின் கதியை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, 9-வது பிரிவிலே, 4-வது உட் பிரிவில் கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள் :

" (4) No person who is not entitled to terminate the engagement of the *mattuvaramdars* under this section on the date of the commencement of this Act shall be deemed to be so entitled by reason of any subsequent change in his circumstances."

அதாவது, இந்தச் சட்டம் ஆரம்பமாகிற காலத்திலே மாட்டு வாரம்தார் வேலை வேண்டாம் என்று கூறமுடியாதவர்கள் பின்னர் கூறமுடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மிராசுதார் இதைச் செய்யக்கூடாது. அதைச் செய்யக்கூடாது என்று போட்டால் அது சரியா, அல்லது நீதியா, என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். போலிக் காரணத்திற்காக மாற்றலாம். போலிக் காரணமா அல்லது உண்மைக் காரணமா என்று யோசித்துப் பார்ப்பதை ரெவன்யூ கோர்ட்டுகளுக்கு விடுவோமேயானால், நியாயத்தையொட்டி எது சரியோ அதை அவர்கள் செய்வார்கள். எப்படி மாறினாலும் நிலச்சுவாந்தாருக்கு பாதுகாப்பு அளிக்கப்படமாட்டாது என்று சொன்னால், அது நியாயமாக இருக்காது. இதையெல்லாம் யோசித்துப் பார்த்து, கை ஏர், மாட்டு வாரம்தாரர்களுக்கு நாம் அளிக்கும் சலுகைகளானது சங்கடங்களை உண்டாக்கக்கூடிய நிலைமையில் இல்லாமல், உண்மையிலேயே பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தில் இன்னும் சில தாலுகாக்களையும், இன்னும் சில கிராமங்களையும் சேர்க்கவேண்டுமென்று சொன்னால், அதனால் புதிய தொல்லைகள் ஏற்படலாம்.

இன்னொரு விஷயத்தையும் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை இப்படியே இப்பொழுதே நாம் அமல் நடத்துவோமேயானால், புதிய தொல்லைகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும். அறுவடை சீசன் முடிந்த பிறகு இதை அமலுக்குக் கொண்டு வரலாம். பல அங்கத்தினர்கள் சொன்னதுபோல, ஏப்ரல் மாதத்திலே இதை அமலுக்குக் கொண்டுவந்தால், புது வருஷத்திலிருந்து இந்த சட்டத்தைக் கடைப்பிடிப்பதாக இருக்கும். அதனால் விவசாயிகளுக்கும் தொல்லை இல்லாமல் இருக்கும் (குறுக்கீடு). 1957-ம் வருஷத்திலே வெளியேற்றியவர்களை உள்ளே சேர்க்கும் அளவுக்கு இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறபொழுது, இனிமேல் வெளியேற்றப்படுகிறவர்களைப் பற்றி கவலைப்படவேண்டாம். ஆகவே, இப்பொழுதே இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தால், அது விவசாயிகளைப் பாதிப்பதோடு நில்லாமல், உணவு உற்பத்தியையும் பாதிக்கக்கூடும். இந்தச் சிறிய சட்டத்தினால் உணவு உற்பத்திக்கு பாதகம் ஏற்படாத முறையில், விவசாய காலம் முடிந்த பிறகு, இதை அமலுக்குக் கொண்டுவந்தால் நல்லது. ஆகையால், இதைப்

பரிசீலனை செய்து, சமூகமான முறையில், விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாதபடி, அறுவடை ஸீசன் முடிந்த பிறகு அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: கனம் சபாநாயகர் அவர்களே திருச்சி ஜில்லாவில் இருக்கக்கூடிய கை ஏர் மாட்டு வாரம்தாரர் களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகக் கொண்டு வரப்படும் இந்த மசோதா வைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவிலேகூட சாகுபடியாளருக்கு பாதுகாப்பு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னபோது, நிலச்சுவான்தார்கள் எதிர்ப்புகளும், எதிர்ப்பு சக்திகளும் தோன்றின. உணவு உற்பத்தி அடியோடு பாதிக்கப் பட்டு, தரிசு நிலமாகப் போய்விடும், சாப்பாட்டிற்கு சோறு இல்லாமல் தேசம் பாழாய் போய்விடும் என்றெல்லாம் தீர்மானங்கள் போடப்பட்டன. எந்த அளவுக்கு பல ஆண்டு காலமாக நம் நாட்டில் இருக்கக்கூடிய உழ வர்கள், சில சுயநல வர்க்கங்களால் சுரண்டப்பட்டு வந்தார்கள் என்பது நாம் அறிந்ததே. பண்டைக் காலத்தில் வள்ளுவர் சொல்லியது போல் " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார். மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் " என்ற கருத்துப்படி முன்னால் உழவர்கள் நல்ல முறையில் வாழ்ந்து இடையில் சுயநிலமிகளால் சுரண்டபட்டார்கள் என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அந்த அடிப்படையிலே, உழ வனுக்கு உரிமை அளித்ததன் காரணமாக, தஞ்சை ஜில்லாவிலே இருக்கும் சாகுபடியாளருக்கு உரிமை அளிக்கும் ஒரு சட்டத்தை ஏற்படுத்தியதன் காரணமாக, தனக்கு உரிமை கிடைத்திருக்கிறது என்று உணர்ச்சி வேகத் தின் காரணமாக, அந்த உணர்ச்சி வேகத்தை உழவன் எப்படி உற் பத்தியைப் பெருக்கி காட்டியிருக்கிறான், பஞ்ச காலத்தில் அமலிலிருந்த ரேஷன் முறையை ஒழிப்பதற்கு எவ்வளவு உதவியிருக்கிறான் என்பதை சென்ற ஆறு ஆண்டு காலத்திலே சர்க்கார் நன்றாகப் புரிந்துகொண்டிருப் பார்கள். உழவனுக்கு உரிமை அளித்ததன் காரணமாக, அந்த அள வுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. இதை நாம் நன்றாகப் புரிந்து கொண் டிருக்கிறோம், கண்டுமிருக்கிறோம். அவ்வாறு நாம் நன்றாகப் பார்த்து, புரிந்து கண்ட பின்பும்கூட, அந்த உழவனுக்கு நாம் உரிமையை அளிக் கும்போழுது, கொஞ்சம் தாராள மனப்பான்மையிலே நடந்து கொள்வது தான் நியாயமாக இருக்கும். எந்த எதிர்ப்புகளையும் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. இந்தக் கை ஏர், மாட்டு ஏர் வாரம்தாரர்களுக்காகச் சட்டம் கொண்டுவரும் பொழுது, இந்தச் சட்டம் 43 கிராமங்களுக்குப் பொருந்தும் என்று இந்த மசோதா கூறுகிறது. என்னுடைய கும்பகோ ணம் தாலூகாவுக்கும், திருச்சி ஜில்லாவிலுள்ள உடையார்பாளையம் தாலூகாவிற்கும் கொள்ளிடம் இருகரையிலும் பார்டரில் சுமார் 50 மைல் நீளம் இருக்கும். இரண்டு எல்லைகளும் கொள்ளிடத்தில் சேர்ந்திருக் கிறது. தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் தான், திருச்சி ஜில்லாவிலுள்ள உடையார்பாளையம் தாலூகாவிலும் மக்கள் இருந்துகொண் டிருக்கிறார்கள். அங்கு இந்த உழவர்கள் எந்த நிலைமையிலிருக்கிறார் கள் என்பதைப்பார்த்தால், நிலச்சுவான்தார்கள் கையில் சிக்குண்டு, மிக வும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரதேசங்களையும் சேர்த்து, அங்குள்ள உழவர்களுக்கும் இந்தச் சட்டபாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், கை ஏர் வாரம்தாரரைப் பொறுத்தவரையில் 3 எக்கராவுக் கும், மாட்டு வாரம்தாரைப் பொறுத்தவரையில் 10 எக்கராவுக்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இத்தனை காலமாக நிலத்தை உழுது கொண்டிருந்தவர்கள், நிலத்தில் வேலை செய்துவந்தவர்கள், வருங்காலத் தில் சட்ட பூர்வமாக பங்கு கிடைக்கும் என்று எண்ணியிருந்தவர்கள் ஏமாற்றம் அடைவார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்பொழுது, அவர் களுக்கு பரிகாரம் அளிக்கவேண்டிய நிலையிலே இந்த விதிவிலக்கு அவசி யமா, இதனால் எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்கள், இந்த விதிவிலக்கு இல்லாவிட்டால் உற்பத்தி குறையுமா என்பதை யெல்லாம் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். விதிவிலக்களித்திருப்பதைத் திருத்தவேண்டும்.

29th October 1958] [Sri T. R. Ramamirtha Thondaman]

(Duputy Speaker in the Chair)

தஞ்சை ஜில்லாவிலே பண்ணையாள் பாதுகாப்புச்சட்டம், சாகுபடி யாளர் சட்டம், நியாயவாரச் சட்டம், ஆகிய சட்டங்கள் எல்லாம் வந்த பிறகு, அந்தச் சட்டங்களின் பூரண பலனையும் விவசாயிகள் அடைந்திருக் கிறார்களா என்று பார்ப்போமேயானால், சட்டங்களின் பலனை நியாய ஸ்தலத்தில் பெறுவதற்கு தகுதியில்லாத நிலையில், வியாஜ்யம் செய் வதற்கு சக்தியில்லாத நிலையில் பண்ணையாளர்கள் சாகுபடியாளர்கள் இருப்பதனால், அவர்கள் இன்னும் கஷ்டப்படும் நிலைமையிலேயே இருக் கிறார்கள் என்பது புலப்படும். நன்றாகப் படித்தவர்கள், சட்ட விவகாரங் களைப் புரிந்தவர்கள், அதிகாரிகளையும் மற்றவர்களையும் நேரடியாகத் தெரி ந்து கொண்டவர்கள், வக்கீல், படித்த நிலச்சுவான்தார்கள் இவர்கள் எல்லாம் நிலசுவாந்தார்களாயிருப்பதால் சட்டத்தின் நன்மைகளை அவர்கள் தான் அடையமுடிகிறது எந்த நோக்கத்தோடு நாம் இங்கே சட்டங்கள் இயற்றுகிறோமோ அதற்கு மாறாக, சட்டத்தின் சந்தேகங்கள் பூராவும் நிலச்சுவான்தார்களுக்கு சாதகமான முறையில் இருக்கின்றன. அதனால் சாகுபடியாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை கோர்ட் தீர்ப்புகளி லிருந்து நாம் காணமுடியும்.

துரதிருஷ்டவசமாக எங்கள் ஜில்லாவிலும், வேறு ஜில்லாக்களிலும் நிலச்சுவான்தார்கள் என்று சொல்லக்கூடிய 'தேவஸ்தானங்கள் ஏராள மாக இருக்கின்றன. மடாதிபதிகள் ஏராளமிருக்கிறார்கள். இவர்கள் நிலம் பெருமளவு மொத்த குத்தகைக்காரர்கள் மூலம் சாகுபடியாளர்களிடம் இருக்கிறது. இதன் காரணமாக, மொத்த குத்தகைதாரரிடம் சாகுபடி செய்பவர்கட்கு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த அதிர்ச்சியினால் என்ன செய்வது என்று ஏக்கமும், கவலையும் கொண்டு மக்கள் தவிக் கிறார்கள். இந்த நிலையேற்படும் முறையில் ஒரு ஹைக்கோர்ட்டு தீர்ப்பு கிடைத்திருக்கிறது. நூறு வேலியை ஐந்து வருஷங்களுக்கு மொத்தமாக குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அதை அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குப் பிரித்து உள் குத்தகைக்காரர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த இடைக் குத்தகைக்காரர்கள் குத்தகையிலிருந்து விலக்கப்பட்டு விட்டால், அத்தனை சாகுபடியாளர்களும் நசுக்கப்படும் அளவுக்கு அத்தனை சாகுபடியாளர் களையும் சட்ட உரிமை வழங்கும் நிலையில் இந்தத் தீர்ப்பு கொடுக்கப்பட்டி ருக்கிறது. இதனால் என்ன செய்வது என்று விவசாய மக்கள் ஏக்கங் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இதற்கு பரிகாரம் காணும்முறையில் அவசரமான நிவாரணமளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எந்த முறையில் பார்த்தாலும் உற்பத்தி குறைந்து விடும் என்ற சந்தேகம் நிச்சயமாகத் தோன்ற வேண்டிய அவசியமில்லை. உழவர்களுக்கு உரிமை அளித்ததினால் உற்பத்தி குறைந்து விடாது என்ற உண்மையை இதற்கு முன்னால் நாம் அனுபவசாத்யமான முறையில் உணர்ந்திருக்கிறோம், கண்டிருக்கிறோம். ஆகவே, இம்மாதிரி ஒரு சட்டம் இந்தப் பகுதியில் கொண்டுவரப்படுவதை நான் மிகவும் வரவேற்கிறேன். அதோடுகூட, ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே இந்த சட் டம் அமுல் செய்யப்படவேண்டும் என்ற தீர்க்கதிருஷ்டியோடு சர்க்கார் கொண்டு வந்திருப்பதை நான் மிக மிக பாராட்டுகிறேன். ஒரு வருஷ நோட்டீஸ் கொடுக்க வேண்டும், ஒரு வருஷ நோட்டீஸ் கொடுத்துவிட்டுத் தான் உழவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்ற நிலைமை சட்டத்தில் இருக்கிறது. இந்த நிலையில்கூட தஞ்சை ஜில்லாவில் எத்தனையோ பண்ணை யாட்களை வெளியேற்ற வேண்டிய அபாயத்துக்கு சட்டம் உள்ளாக்கி யிருக் கிறது. ஒரு வருஷம் என்ன, 9 வருஷங்கள் கூட நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை ஆண்டவன் ஒத்துக்கொள்வார். இல்லாவிட்டால், சாகுபடியாளர்கள் பண்ணையாட்களே இல்லாமல் போய் விடும். ஒருவருக்கொருவர் தகராறுகள் ஏற்படும். பத்து ஏகர், மூன்று ஏக்கருக்கு விதி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஒரு வருஷத்திற்கு முன்னாலேயே பாகப்பிரிவினை மூலம் மூன்று ஏகர், பத்து ஏகர் என்று பிரித்து குழப்பம் ஏற்படுத்தியிருந்தால் கை ஏர் வாரம்தார், மாட்டு வாரம்தாரர் இல்லாமலே போய்விடுமோ என்ற சந்தேகம் ஏற்படு

3-30 p.m.

கிறது. அந்த அடிப்படையில் அங்குள்ள நிலைமைக் கேற்றவாறு இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அடுத்தபடி இந்த சட்ட மன்றத்தில் பலவிடங்களில் பலவிதமாக யிருந்த அளவு முறையை ஒருமுக படுத்தி மாகாணம் பூராவுக்கும். ஒரே முறையில் அளவு முறை சட்டமாக்கப்பட்டது போல், ஒருமுகமான ரீதியிலே உழவர்கட்களுக்கும் ஒரு முகமான உரிமையை அளித்து மாகாணம் பூராவும் நிரந்தரமான சட்டத்தை அமுல் செய்து உழவருக்கு உரிமை அளித்து உழவனுக்கு நிலம் சொந்தம் என்ற மகாத்மா காந்தியின் விருப்பத்தை நாம் பூர்த்தி செய்யவேண்டும். உணவு உற்பத்தி பெருகக்கூடிய அளவுக்கு உழவர் பெருமக்கள் சென்ற ஆண்டு உழைத்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி ஓரளவுக்கு பெருகியிருக்கிறது. மகாத்மா காந்திஜியின் விருப்பப்படி நிலம் உழுபவர்களுக்கே சொந்தம், அவர்களுக்குத்தான் உரிமை உண்டு என்ற முறையில் சட்டம் கொண்டு வந்திருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனால் உற்பத்தி பெருகும், அதிகப்படியாக விளையும் என்பதை நான் நிச்சயமாகக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு உழவர்கள் கையில் தான் ஆயுதங்கள் இருக்கின்றன, உணர்ச்சி இருக்கிறது. அவர்கள் தான் உழ முடியும். அவர்களால்தான் உற்பத்தியை பெருக்க முடியும். திருவெண்காடு சுப்பிரமணியம் நாதசுவரத்தை கையில் எடுத்தால், அவர் வாசிப்பதை ரசிப்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். ஆனால் அந்த நாதசுவரம் வேறு ஒருவர் கையில் இருந்தால், அது அடுப்பில் வைப்பதற்குத்தான் உபயோகப்படும். நாதசுவரத்தை வைத்துக்கொண்டு அதை வாடகைக்கு விடுவதுபோல், நிலத்தை உழத் தெரியாதவர்கள் சென்னையிலும் டெல்லியிலும் உட்கார்ந்துகொண்டு நிலத்தை குத்தகைக்கு விடுகிறார்கள். நாதசுவரத்தின் அருமை எப்படி அந்த வித்வானுக்குத்தான் தெரியுமோ, அதேமாதிரி நிலத்தின் பெருமை உழவர்களுக்குத்தான் தெரியும். அவர்களுக்குத்தான் உரிமை இருக்கவேண்டும். நிலத்தின் தரம் அவர்களுக்குத்தான் தெரியும். நிலத்தின் வளம் உழவர்களுக்குத்தான் தெரியும். அவர்கள் குடிசையில் இருந்துகொண்டு வாழ்க்கையில் வளம் பெறாமல் வாடிவ தங்குவதற்குக் காரணம் இந்த நாட்டில் இருக்கக்கூடிய நிலச்சுவான்தாரர்களுடைய வர்க்கம்தான். இதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம், பார்த்திருக்கிறோம், நமக்குத் தெரிந்திருக்கிறது. தெரிந்த பிறகும்கூட மேலும் காலம் தாழ்த்துவது நல்லது அல்ல. ஒரு சிலர் சொல்லலாம் உற்பத்தி குறைந்துவிடும் என்று. நிச்சயமாகச் சொல்லுகிறேன், நெல்லுக்காய்ச்ச மரம் எங்கு இருக்கிறது என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் என்றால் என்னவென்று தெரியாது. விளைச்சல் என்றால் என்ன வென்று தெரியாது. எங்கேயோ இருந்துகொண்டு, மாளிகையில் உட்கார்ந்துகொண்டு கணக்குப் போடுவார்கள். இதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த சட்டத்தை இன்னும் தீவிரமாகக் கொண்டு வருவதற்கு சர்க்கார் முயற்சி செய்யவேண்டும். இந்த சட்டத்தின் பயனை வாரசாகுபடிக்காரர்கள் அனுபவிக்கக்கூடிய முறையில், சட்ட சிக்கல்கள் இல்லாமல் அதிகாரிகளிடத்தில் நியாயமான முறையில் பயன் பெறுவதற்கு வசதி செய்ய வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் வந்தபோது ரெவின்யூ கோர்ட்டு கன்ஸிலியேஷன் கோர்ட்டு ஆக இரண்டு கோர்ட்டுகள் இருந்தன. நியாய வார சட்டம் வந்த பிறகு இப்பொழுது முனிசீப் கோர்ட்டுக்கு போகவேண்டிய நிலைமையும் இருக்கிறது. கேள்வி முறை இல்லாமல், தடை உத்தரவு போடப்படுவதால் சாகுபடியாளர்கள் எந்த வக்கீலிடம் போய் பரிகாரம் தேடுவது என்று தவிக்கிறார்கள். திக்கு முக்கலாடி கஷ்டப்படுகிறார்கள். பாதுகாப்பு சட்டப்படி ரெவின்யூ கோர்ட்டு இருந்தபோது ஒரு மாதம் தவணை கொடுக்கும் நிலை இருந்தது. நியாய வாரப்பட்டி இப்பொழுது ரெவின்யூகோர்ட்டில் ஏதாவது பாக்கியிருந்தால் தவணைக்கொடுக்கப்படாமலே நிலத்தைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். இதனால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் வெளியேற்றப் படுகிறார்கள். சென்ற காலத்தில் இந்த சட்டங்கள் ஒரு சிறிது காலத்திற்கு நல்ல பலன் அளித்தன. இப்பொழுது வரவர சட்டத்தினுடைய பயன் மக்களுக்கு

29th October 1958] [Sri T. R. Ramamirtha Thondaman]

கிடைக்க முடியாத நிலைமை இருந்துகொண்டு வருகிறது. இக்காரணத்தினால், சட்டத்தினுடைய அமைப்பை திருத்தி, நிர்வாகத்தில் நல்ல சூழ்நிலையும், நல்ல முற்போக்கும் ஏற்படவேண்டும், உழவர் பெருமக்கள் மேலும் அபிவிருத்தி அடைய வேண்டும், நாட்டில் உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்று மகாத்மாஜி, வள்ளுவர் போன்றவர்கள் கண்ட கனவை நினைவாக ஆக்கி, இந்த நாட்டினுடைய நலனை பாதுகாக்க உழவர் பெருமக்களுக்கு உரிமையை அளிக்கும் இந்த சட்டத்தை திருச்சி ஜில்லாவில் கொண்டுவருவதை நான் பாராட்டுவதோடு, மாகாணம் பூராவும் உழவர்களிடம் நேரிடையாக நிலத்தை அளித்து, மேலும் நல்லதோர் சட்டத்தை சர்க்கார் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திருச்சி ஜில்லாவில் இருந்துகொண்டுவரும் கை ஏர் வாரம்தாரர்கள், மாட்டு வாரம்தாரர்கள் சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பாதுகாப்புக்கு உரியவர்களா, இல்லையா என்பது பற்றி சர்ச்சை இருந்து வந்திருக்கிறது. கை ஏர் வாரம்தாரர்கள், மாட்டு வாரம்தாரர்கள் வாரம்தாரர்கள் தான் என்பதை நான் இப்பொழுது ஒன்றும் புதியதாகச் சொல்லவில்லை. அவர்களுக்கும் சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பாதுகாப்பு உண்டு என்று திருச்சி ஜில்லாவில் ரெவின்யூ கோர்ட்டு தீர்ப்பு அளித்திருக்கிறது. நிலச்சுவான்தார்களுக்கு இருக்கக்கூடிய வசதியின் காரணமாக, அவர்கள் ரெவின்யூ கோர்ட்டின் தீர்ப்புக்கு மேல் ஹைகோர்ட்டில் ரிட் பெடிஷன் போட்டார்கள். ரிட் பெடிஷன்பேரில் வாதிக்கக்கூடிய காலத்தில் கூட, நம்முடைய சர்க்காரின் சார்பில் வாதித்த அட்வகேட் ஜெனரல் கை ஏரு வாரம்தாரர்களும், மாட்டு வாரம்தாரர்களும் ' கல்டிவேடிங் டெனண்டுகள் ' தான் என்று சொல்லி அதற்கு போதுமான ஆதாரங்கள் கொடுத்து அங்கே வாதாடியிருக்கிறார்கள். நீதிபதியும் என்ன சொல்லியிருக்கிறார்கள் ? நீதிபதி சொல்கிறபோதும் சாகுபடியாளர் என்பதற்கு எல்லா அம்சமும் இருக்கிறது. ஆனால் நிலம் யார் வசத்தில் இருக்கிறது என்பதில் திருப்திகரமான விவரம் இல்லை. ஆகையால் இவர்களை சாகுபடியாளர் என்கிற வியாக்கியானத்திற்குட்படுத்த முடியாது, 1955-ம் வருஷச் சட்டப்படி என்று தான் கூறினார். 4-00 p.m.

ஆனால் நமக்கு முன்னால் இருக்கக்கூடிய பிரச்சனை என்ன? சாகுபடியாளரா இல்லையா என்பது பிரச்சனை அல்ல. சாகுபடியாளர் என்கிற ரீதியில் சர்க்காருக்கு திட்டமான கொள்கை இல்லாவிட்டால் அட்வகேட் ஜெனரல் கோர்ட்டில் எப்படி வாதாடுவார். சர்க்காருடைய அனுமதி இல்லாமல் அட்வகேட் ஜெனரல் வாதாடியிருப்பார் என்று எண்ண முடியவில்லை. இப்போது அந்தக் கொள்கையில் ஏன் மாறுதல் செய்ய வேண்டும். அட்வகேட் ஜெனரல் வாதாடியது சரி என்பதை உணர்ந்தே கனம் பக்தவச்சலம் அவர்களும், முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களும் அந்த ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்து பகிரங்கமாக அவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சட்டத்தில் இருக்கக்கூடிய கோளாறு காரணமாகத்தான் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியவில்லை. ஆகையால் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்றுதான் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். திடீரென்று கொள்கையில் ஏன் மாறுதல் ஏற்பட்டது என்று தான் தெரியவில்லை. சட்டத்தைத் திருத்துவதற்குப் பதிலாக அவர்கள் கொள்கையை மாற்றிக் கொண்டுவிட்டார்களா? ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. சுப்பிரமணியம் உண்மையைச் சேகரித்துவிட்டதாகவும், கடந்த மூன்று வருஷ காலமாக ரெவின்யூ கோர்ட்டுகள் கொடுத்திருக்கக் கூடிய தீர்ப்புகளிலிருந்து சேகரித்த விஷயங்களைக் கொண்டும் இந்த மசோதா தயாராகி இருக்கிறது என்பதற்கு அவசியம் இல்லை. ஒரளவு நியாயவார சட்டத்தின்படி பாதுகாப்பு கொடுக்கலாம். அந்த முடிவுக்கு சர்க்காரும் சர்க்கார் கட்சித் தலைவர்களும் வந்தார்கள். அதில் ஆரம்பத்திலிருந்தே என்னுடைய கருத்து கையேர் வாரமானாலும். சரி, மாட்டு வாரமானாலும் சரி, சாகுபடியாளர் தாம். நியாயவார சட்டத்தின் கீழ் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். ஒரேமாதிரி

[Sri M. Kalyanasundaram] [29th October 1958

வாரம்தான் இருக்க வேண்டும் கை ஏர் வாரம் ஒன்று மாட்டு வாரம் ஒன்று என்பதை ஒப்புக்கொள்ளக் கூடாது. ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. இந்தக் கொள்கை ஒப்புக்கொள்ளப்படவில்லை. முன்பு சொன்னபடி சட்டத்தைத் திருத்துவதற்குப் பதிலாக இந்தக் கருத்தையே திருத்திக் கொண்டுவிட்டார்கள். அந்தக் கட்சியில் இருந்து பேசிய ஒரு வரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மசோதாவை ஆதரிப்பதாகச் சொல்லிக் கொண்டு அடிப்படைக் கொள்கையையே எதிர்த்தார்கள். அதுவும் சர்க்கார் கட்சிக் கொரடா பேசும்போது பேசுகிற வேகத்தில் "லாண்டு டுத டில்லர்வி" என்பதைப் பற்றி எளனம் செய்தார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அந்தக் கோஷத்தை முன் வைத்திருப்பதாக நினைத்துக் கொண்டோ என்னவோ அப்படி எளனம் செய்தார்கள். கம்பராமாயணத்தில் அவர் செலுத்துகிற கவனத்தில் ஒரு சிறு பகுதியை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ பட்டாபி ராமையா எழுதிய புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் இந்த கோஷத்தை முதலில் எழுப்பியவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்றே தெரிந்து கொண்டிருக்க முடியும். **Land to the tiller and power to the people** என்கிற கோஷம் காங்கிரஸ்காரர்களால் தான் ஏற்படுத்தப் பட்டது. ஆகவே அந்தகோஷத்தையே எளனம் செய்ய வேண்டுமானால் காங்கிரஸ் கட்சியின் முன்னோர்கள் செய்த தீர்மானத்தை எளனம் செய்வதாகத்தான் ஆகிறது. ஆகவே, அப்படி எளனம் செய்வதைவிட்டு உண்மையில் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னை என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

விவசாயப் பிரச்சனையைத் தீர்ப்பது ஒன்றுதான் நமது விடுதலைப் பிரச்னையாகும். நம் நாட்டு விவசாயப் பிரச்சனையின் ஜீவநாடியாக இருக்கக்கூடிய உழவர்களுடைய பிரச்சனையைத் தீர்த்துவிட்டால் எல்லாப் பிரச்சனைகளிலும் வெற்றி பெற்றவர்களாக ஆகிவிடுவோம். இதை எப்படித் தீர்ப்பது என்கிற கண்ணோட்டத்தில்தான் மாறுபட்ட அபிப்பிராயம் இருக்கிறது. நியாயவார சட்ட அடிப்படையில், பண்ணையாள் சட்ட அடிப்படையில் இந்த கையேர், மாட்டு வார மசோதாவைக் கொண்டு வந்திருந்தால் மிகவும் நல்ல முறையில் அமைந்திருக்கும். இன்றைக்குப் பார்த்தால் இந்தச் சட்டப்படி பத்து ஏக்கருக்கு அதிகமாக இருக்கக்கூடிய நிலங்களில் வேலை செய்பவர்களுக்கு நியாயவார சட்டமும் பொருந்தும், பாதுகாப்புச் சட்டமும் பொருந்தும். பத்து ஏக்கரிலிருந்து ஏழு ஏக்கரா வரையில் இடையில் உள்ளவர்களுக்கு ஓரளவு பொருந்தும். நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடாது என்கிற பாதுகாப்பு இருக்கிறது. மூன்று ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்கள் சொந்த சாகுபடி என்று நிலத்திலிருந்து வெளியேற்றிவிடலாம். சொந்த சாகுபடி செய்பவர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். அதைப் பற்றி ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அரை குறையாகச் சட்டம் கொண்டுவரப்படுவதனால் சாகுபடியாளர்கள் அநேக விதத்தில் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமே தவிர நம்முடைய நோக்கம் நிறைவேறாது.

நங்கவரம் பண்ணை, பரம்பலூர் ராயர் பண்ணை முதலிய இடங்களில் ஏற்கெனவேயே இந்தச் சட்டம் வரும் என்று உணர்ந்து வெளியேற்றம் நடைபெற்றுவிட்டது. அவர்களை எல்லாம் இந்தச் சட்டம் எந்த விதத்திலும்
4-10 p.m. கட்டுப்படுத்தாது. சமீப காலத்தில் நிலத்தை விட்டு வெளியேற்றிய சாகுபடியாளர்களை மீண்டும் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டி வரும். அல்லது நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியிருக்கும். நிலப் பிரபுக்களுக்கு இதனால் கஷ்டம் ஏற்படாது. ஏற்கெனவே இருந்த உறவு முறை எதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து அதை நீக்குவதற்கு முயற்சி செய்தாலே போதும். இன்றைக்கு சாகுபடி செய்பவர்கள் யார், ஹரிஜனங்கள். அவர்களுக்கு சாகுபடிக்கு வேண்டிய வசதி இருக்குமா என்பதாக எல்லாம் பேசுவது சரியல்ல. இந்த ஏற்பாட்டின் விளைவு என்னவாக இருக்கும்? இதன் விளைவாக கையேர் வாரம்தார்கள் தாங்கள் உழும் நிலங்களை இழக்க நேரிடும். கணிசமான மாட்டேர் வாரந்தார்களும் நிலங்களை இழக்க வேண்டி வரும். இதனால் உற்பத்தி பாதிக்கப்

29th October 1958] [Sri M. Kalyanasundaram]

படும். நிலச் சீர்திருத்தத்தால் உற்பத்தி பாதிக்கப்படும் என்ற புதிய தத்துவத்தை இப்போது சிலர் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால், நிலச் சீர்திருத்தத்திற்குப் பிறகு உணவு உற்பத்தி பெருகியிருப்பதை நிலத்தோடு தொடர்புள்ள ஒரு கனம் அங்கத்தினர் எடுத்துக் காட்டியது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். கையேர் வாரம்தார் மாட்டேர் வாரம்தார் அவசரச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அளவிற்காவது இந்த மசோதாவில் இந்த வாரம்தார்களுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். அதில் இருந்த சலுகைகளையும் விடக் குறைவான சலுகைகளையே கொடுக்கக்கூடிய முறையில் சட்டமியற்றக்கூடாது இதற்குரிய முறையில் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக சட்டத்தை 43 கிராமங்களில் மட்டும் அமல் நடத்துவது போதாது. பதினைந்திற்கும் குறைவான நாட்களுக்கு முன்பே ஜில்லாவில் உத்தியோகப் பொறுப்பேற்ற கலெக்டரும், இரண்டு நாட்கள் ஜில்லாவை சுற்றுப் பிரயாணம் செய்த ரெவின்யூ போர்டு மெம்பரும் அனுப்பிய ரிப்போர்டின் அடிப்படையில் சட்டமியற்றுவதானது, இந்த சபையின் கௌரவத்திற்கும் சட்டமியற்றும் திறமைக்கும் ஹானி விளைவிப்பதாகும். இப்போதே நிலப் பிரபுக்களுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்பதை ஹைக் கோர்ட் தீர்ப்புகளிலிருந்தும் இதர கோர்ட்டுகளின் தீர்ப்புகளிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். நிலப் பிரபுக்களின் அந்த வலிமை இந்த சபைக்குள் நுழைவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று எல்லா கனம் அங்கத்தினர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இது எந்த விதமான கட்சிப் பிரச்னையும் இல்லை. என் கட்சியைப் பொறுத்தவரையில், இதை நான் கட்சிப் பிரச்னையாகக் கருதவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நியாயமான உரிமைகளை கட்டாயம் வழங்க வேண்டும். இந்த சபை இயற்றும் சட்டத்தை ஹைக்கோர்ட் குறை கூறுவதால் இந்த சபையின் கௌரவம் குறைந்துவிடாது. சட்டத்தை மட்டும் பரிசீலிக்கும் தன்மை தான் ஹைக்கோர்ட்டிற்கு இருக்குமே தவிர, நிலப் பிரச்சனைகளை உணரும் தன்மை ஹைக்கோர்ட்டிற்கு இருக்காது.

இயற்றப்படும் சட்டத்தை மசோதாவில் குறிப்பிட்டுள்ளதுபோல் திருச்சி ஜில்லாவில் 43 கிராமங்களில் மட்டும் அமலுக்குக் கொண்டுவருவது போதாது. சட்டத்தை ஜில்லா பூராவிலும் அமலுக்குக் கொண்டுவர வேண்டும். குறிப்பாக நான் முன்பு குறிப்பிட்ட ஐந்து தாலூகாக்களிலும் கையேர் வாரம்தார்களும் மாட்டேர் வாரம்தார்களும் நிறைய இருக்கிறார்கள். ஆகவே அந்த ஐந்து தாலூகாக்களிலும் சட்டத்தைக் கட்டாயம் அமலுக்குக் கொண்டுவர வேண்டும். முதலிலேயே எல்லாக் கிராமங்களிலும் சட்டத்தை அமலுக்கு கொண்டுவராவிட்டாலும் படிப்படியாகவாவது எல்லா கிராமங்களுக்கும் சட்டத்தை விஸ்தரிக்க சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அந்த நோக்கத்துடன் நான் இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். ஜில்லா பூராவிலுமே சட்டத்தை அமல் நடத்தலாம். அவ்வாறு செய்யாவிட்டால் எந்த எந்த கிராமங்களுக்கு சட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமோ அவைகளுக்கு அவ்வப்போது சட்டத்தை விஸ்தரிப்பதற்கான அதிகாரம் சர்க்காருக்கு மசோதாவில் அளிக்கப்படவேண்டும். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் தஞ்சாவூர் ஜில்லாவில் அமல் நடத்தியதுடன் சிதம்பரம் தாலூகாவிற்கும் விஸ்தரிப்பதைப் போல இந்தச் சட்டத்தையும் அவ்வப்போது மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிப்பதற்கு வகைசெய்யும் திருத்தத்தையும் நான் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். மசோதா பிரிவுவாரியாக விவாதிக்கப்படும்போது மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசலாம் என்று எண்ணி இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir. The hon. Member, while referring to the judgments of the High Court, was saying that the court might have been influenced by

the strength of the landlords. In Democracy, we place the highest confidence in the Judiciary and that is why we say it must be kept above politics and above every influence of the Government.

DEPUTY SPEAKER : The hon. Member did not criticise the judgment of the High Court.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I would only invite your attention to the fact whether it would not amount to contempt of the Judiciary.

DEPUTY SPEAKER : The hon. Member is perfectly right in mentioning what he said.

*THE HON SRI M. A. MANICKAVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா எந்த சந்தர்ப்பத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் முதலிலேயே தெரிவித்தேன். விவசாயம் ஒரு பழைய புராதனத் தொழில். இந்த நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே அது மிகவும் முக்கியமான தொழில். அந்தத் தொழில் சரியாக நடக்காவிட்டால் அதை நம்பி வாழும் அநேகர் உயிர்வாழ முடியாது. ஆகையால் விவசாயத்தில் சர்க்கார் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். நிலச் சொந்தக்காரருக்கும் நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிக்கும் பழைய காலத்தில் நல்ல மாதிரியான உறவு இருந்து வந்தது. அந்தக் காலத்தில் அவர்களிடையே சண்டை—சச்சரவு இல்லை. அந்தக் காலத்தில் சட்டம் இல்லாமலே சாகுபடியாளர்கள் தங்களுக்காக வேண்டிய உரிமைகளை பெற்றுக்கொண்டு நல்ல முறையில் சாகுபடி செய்துவந்தார்கள். ஆனால் புதிய இயக்கங்களும் புதிய நோக்கங்களும் புதிய கோஷங்களும் ஏற்பட்ட பிறகு இந்தத் தொழிலில் நிலச் சொந்தக்காரருக்கும் சாகுபடியாளருக்கும் இடையே தகராறுகளும் மனஸ்தாபங்களும் ஏற்பட்டன. அதன் காரணமாக குழப்பங்களும் கலவரங்களும் ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது ; நல்ல சூழ்நிலையில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடையே சுமுகமான உறவுநிலையும் இல்லாமல் போய்விட்டது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் இவர்களுடைய தகராறுகளில் தலையிட வேண்டியிருக்கிறது ; விவசாய சம்பந்தமான சட்டங்களை இயற்ற வேண்டியிருக்கிறது. அரசாங்கம் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டிருப்பதுடன் மட்டுமின்றி உலகில் மற்றெல்லா நாடுகளிலும் ஏற்பட்டிருக்கிறது. உலகில் எல்லா நாடுகளிலும் முதன்முதலில் விவசாயத்தையும் நிலப்பிரச்னைகளையும் பற்றிய சட்டங்களைத்தான் இயற்றியிருக்கிறார்கள். எனவே இந்த நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை இதுவரை வேறு நாடுகளில் ஏற்படாத புதியதொரு நிலைமை அல்ல.

நிலச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டால், முதலில் சாகுபடியாளருக்கு "பிக்ஸிடி ஆப் டென்யூர்" வேண்டும். நிலத்திலிருந்து சாகுபடியாளரை இஷ்டப்படி வெளியேற்றுவதற்கு நிலச் சொந்தக்காரருக்கு உரிமை இருக்கக்கூடாது. ஆனால் அடிப்படையில் அந்த உரிமை நிலச்சொந்தக்காரருக்கு இருக்கிறது. நிலம் என்பது நிலச்சொந்தக்காரரின் சொத்து. அந்த முறையில் நிலச்சொந்தக்காரர் நிலத்திலிருந்து சாகுபடியாளரை எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றலாம். ஆனால் முன்பெல்லாம் நிலச்சொந்தக்காரர்கள் அந்த உரிமையை அனாவசியமாகவோ அடிக்கடியோ பயன்படுத்திக்கொள்ளவில்லை. விவசாயிகள் மிகவும் தவறுகள் செய்தால் அப்போதுதான் அவர்களை நிலச்சொந்தக்காரர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றிவந்தார்கள். ஆனால் புதிய கோஷங்கள் வந்த பிறகு விவசாயிகளை நிலச்சொந்தக்காரர்கள் அனாவசியமாகவே நிலங்களிலிருந்து நீக்க ஆரம்பித்தனர். நிலச்சொந்தக்காரர்கள் அவ்வாறு செய்வதை அரசாங்கம் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாது. தொழில் அபிவிருத்தியை

29th October 1958] [Sri M. A. Manickavelu]

முன்னிட்டும், நாட்டில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியதை முன்னிட்டும் அரசாங்கம் அவர்களுடைய தகராறுகளில் தலையிட வேண்டியிருந்தது. அந்தக் காரணத்தால் அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டங்களை கொண்டுவந்திருக்கிறது. அவைகளில் " கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் " மிகவும் முக்கியமானது. சாகுபடி செய்யும் விவசாயிகளை நிலங்களிலிருந்து அநாவசியமாக வெளியேற்றப்படுவதை அந்தச் சட்டம் தடுக்கிறது. சாகுபடியாளர்களுக்கு அந்தச் சட்டம் அந்த அளவிற்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது. மேலும் பழைய காலத்தில், நிலத்தில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு நிலச்சொந்தக்காரர்கள் ஏதோ ஒரு அளவிற்கு ஊதியம் கொடுத்து வந்தார்கள். அந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு அப்போது விவசாயிகள் திருப்தியுடன் இருந்தார்கள். இப்போது விவசாயிகள் அதிக ஊதியம் பெற விரும்புகிறார்கள். இந்த விருப்பம் அவர்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணஸ்தர்களாக இருப்பவர்கள் நிலச் சொந்தக்காரர்களும் இல்லை, விவசாயிகளும் இல்லை, மற்றவர்கள் தான். அந்த இரு பிரிவினருக்கும் மத்தியிலுள்ளவர்கள் அவர்களுக்கு அந்த விருப்பத்தை உண்டாக்கினார்கள். " நானும் சினிமாவிற்குப் போக வேண்டும், நாமும் வெள்ளை சொக்காய் போட்டுக் கொள்ள வேண்டும் " என்ற ஆசை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. தன்னைப்போலவே மனிதனாக இருக்கும் நிலச்சொந்தக்காரன் தினந்தோறும் 3–4 தடவை சாப்பிடுவதுடன் பல சௌகரியங்களையும் அனுபவித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து விவசாயிக்கு இந்த ஆசை ஏற்பட்டது. நிலச்சொந்தக்காரருக்கு உள்ள அளவிற்கு அவ்வளவு சௌகரியங்கள் தனக்குக் கிடைக்காவிட்டாலும் ஓரளவிற்காவது தனக்கு சௌகரியங்களை வேண்டுமென்ற ஆசை அவனுக்கு ஏற்பட்டது. ஆனால், முன்காலத்தில் " இது நம் தலை விதி " என்று விவசாயிகள் சும்மா இருந்தார்கள். இப்போது மத்தியிலுள்ளவர்கள் சும்மாயிருக்கவில்லை. அவர்கள் விவசாயிகளிடம் சென்று " நிலச்சுவான்தார் மோட்டார்காரில் போகிறான், சுகபோகம் அனுபவிக்கிறான் உனக்கு அதெல்லாம் இல்லையே ; நீ கிளர்ச்சி செய், நாங்கள் ஆதரிக்கிறோம். உனக்கும் எல்லாம் கிடைக்கும் " என்று சொன்னார்கள். அதைக் கேட்ட விவசாயி " நாமும் கிளர்ச்சி செய்வோம் ; ஏனென்றால் ஏதேதோ வாங்கிக் கொடுப்பதாக இவர்கள் சொல்கிறார்களே "; என்று எண்ணி கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தான்.

ஆகவே அதற்கும் ஓரளவு பரிகாரம் தேடவேண்டுமென்று " பெயர் ரென்ட் ஆக்ட் ", அதாவது நியாயமான வகையில் போதுமான ஊதியம் கொடுக்கவேண்டுமென்று 60–40 சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்த மாகாணத்தில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் பொருந்தும் என்பதுதான் சட்டம். ஆனால் அதை சட்டபூர்வமாக பார்த்ததில் கையேர் வாரந்தார், மாட்டேர்வாரந்தார் என்ற விவசாயிகள், கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்ற டெபினிஷனில் வரவில்லை என்று ஹைகோர்ட் சொல்லிற்று. அதனால்தான் இதை யோசனை செய்யவேண்டியதாக இருக்கிறது. நமது உத்தேசம் விவசாயிகளுக்கு இந்த உரிமைகள் கொடுக்கவேண்டுமென்றுதான் இந்தச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் புதுவிதமான ஒரு விவசாய முறை திருச்சி ஜில்லாவில் எங்கேயோ சில இடங்களில் இருக்கிறது. அவைகள் இந்த சட்டத்தின் கீழ் வரவில்லை என்று ஹைகோர்ட் மூலம் தெரிந்தது. ஹைகோர்ட் சட்டபூர்வமாக செய்யுமே தவிர வேறு மாற்றம் செய்ய முடியாது. சட்டசபைதான் கொள்கைகளை எற்றவாறு அமைத்து வேண்டியது செய்ய வேண்டும். சட்டபூர்வமாகவுள்ள வியாக்கியானத்தைத்தான் கோர்ட்டார் கொடுப்பார்கள். கோர்ட்டார், இவர்கள் கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் அல்ல என்று தீர்ப்பு கொடுத்தார்கள். ஆகவே, கையேர்வாரந்தார், மாட்டு வாரந்தார் இவர்கள் ஓரளவு இம்மாதிரியான விவசாயிகள்தான் என்ற அபிப்பிராயம் இருந்தாலும் அவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லி ஆர்டினென்ஸ் பிறப்பிக்கப்பட்டது. அதற்கு பிற்பாடு மசோதா கொண்டுவரப்பட்டது. எப்பொழுதும் மசோதா செய்யும் போதுதான் அதை நல்ல வகையில் செய்யவேண்டுமென்று ஊன்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே, எந்த அடிப்படையில் இவர் 4-20 p.m.

கள் விவசாயம் செய்கிறார்கள் என்று பார்க்க போர்ட் மெம்பரை அனுப்பி, மற்ற உத்தியோகஸ்தர்கள் மூலம் சரியான விவரங்களை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் தலைவர் சொல்கிறார், அதற்கு முன்னிருந்த கலெக்டர் எழுதினாரே, இவர் போய் இரண்டு மூன்று மணி நேரத்தில் என்ன பார்க்க முடியுமென்று சொன்னார்கள். முன்னால் கலெக்டர் சொன்னது, தாசில்தார், மணியக்காரர் எல்லோரையும் கலந்துதான் முடிவெடுக்கிறார்கள். அவர்கள் " அ " யிலிருந்து ஆரம்பிக்க மாட்டார்கள். உள்ள மெட்டீரியலைக் கொண்டு அவர்கள் முடிவிற்கு வருவார்கள். கையேர்வாரந்தாருக்கும், மாட்டு வாரந்தாருக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. கையேர்வாரந்தார் வேலை, உழவேண்டியது. இன்னும் சிலர் உழுவதோடு கூட தண்ணீரும் காட்டுவார்கள். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : மாடுகளுக்குத்தான் தண்ணீர் காட்டுவார்கள்). சாதாரணமாக தமிழில் சிலர் அப்படி சொல்கிறார்கள். மாட்டுவாரம்தார், உழுது, விதை போட்டு, நாற்று நட்டு, களை பிடுங்கி, தண்ணீர் கட்டி என்ன என்னவெல்லாமோ செய்கிறார்கள். கையேர்வாரந்தார் என்று சொல்லப் படுகிறவர்கள், நிலத்தை உழுவதோடு, தண்ணீரும் கட்டுகிறார்கள். இவர்கள் ஓரளவு காஷ்வல் லேபரர்கள்தான். இல்லை, இதற்கும் கொஞ்சம் மேல். காஷ்வல் லேபர் என்றால் கூலிக்கு வருபவர்கள். ஆனால் கையேர் வாரம்தார் வருஷம் பூராவும் நிலத்தை நம்பியிருக்கிறவன். உழும் காலத்தில் உழுகிறான். மற்ற காலங்களில் வேறு வேலை பார்க்கிறான்.

SRI M. KALYANASUNDARAM : கையேர்வாரந்தாரைப் பற்றி அமைச்சர் அவர்கள் இப்பொழுது கொடுக்கக்கூடிய விவரமானது, யாருடைய ரிப்போர்ட்டின் அடிப்படையில் கூறுகிறார்கள் ? அவர்களே விசாரித்துப் பார்த்தார்களா ? அல்லது முதலில் கலெக்டர் என்ன ரிப் போர்ட் கொடுத்தார் ? பின்னர் ரெவின்யூ போர்ட் மெம்பர் என்ன ரிப்போர்ட் கொடுத்தார் ? என்பதை சட்டசபையின் முன்னர் வைக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ரெவின்யூ அமைச்சர் சொல்வது, எல்லாவற்றையும் பரிசீலித்து எது சரியோ அதைத்தான் சொல்கிறார். ஆனால் அங்கத்தினர் அவர்கள் சொல்வது ஒருவர் சொன்னதைத்தான் சொல்கிறார். நான் எல்லா ரிப்போர்ட்களையும் பார்த்துவிட்டுத் தான் சொல்கிறேன். கல்டிவேட்டிங் டெனென்ட்ஸ் செய்யும் முழு வேலை இவர்களுக்கு கிடையாது. ஆகவே கையேர்வாரந்தார் என்பவன், கல்டி வேட்டிங் டெனன்ட்க்கும், காஷ்வல் லேபருக்கும் நடுவில் உள்ள ஒரு பிராணி. மாட்டுவாரந்தார் இன்னும் கொஞ்சம் அதிகப்படியானவன். அதாவது, உழுவதற்கு மாடும் கொடுக்கிறார், உழுகிறார், தண்ணீரும் கட்டுகிறார், களை பிடுங்குகிறார் என்னவெல்லாமோ செய்கிறார். அவரும் முழு அளவு விவசாயி அல்ல. கொஞ்சம் குறைவுதான். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட்படி என்னென்ன உரிமைகள் இருக்கின்றனவோ அவைகளெல்லாம் மாட்டு வாரந்தாருக்கு இருக்கிறது. கையேர் வாரந்தாருக்கு அது இல்லை. ஆனால் பிக்ஸிடி ஆப் டென்யூர் கொடுக்கப் பட்டிருக்கிறது. அது நியாயமே. மாட்டுவாரந்தாருக்கு வேலை பங்கு கொஞ்சம் அதிகம் இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை அமலுக்கு கொண்டுவருவது பற்றி சில அங்கத்தினர்கள் ஒரு அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதாவது, சாகுபடி செய்து அறுவடை காலம் முடிவு அடையும் முன்னர் இந்த மசோதாவை அமுலுக்கு கொண்டு வந்தால் அதனால் சில இடையூறுகள், சில கஷ்டங்கள் ஏற்படும் என்று. ஆகவே, சாகுபடி காலம் முடிவான பிற்பாடு மறு சாகுபடி காலத்தில் இருந்து இதை அமுலுக்கு கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லி அதற்காக திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கமும் திருத்தம் கொடுத்திருக்கிறது. ஏப்ரல் மாதத்தில் அறுவடை ஸீஸன் ஆரம்பமாகிறது. அப்பொழுதிருந்து வைத்துக்கொள்ளலாம் என்று திருத்தம் வந்திருக்கிறது. ஷரத்துவாரியாக பரிசீலிக்கும்போது அதைப் பார்த்துக்கொள்ளலாம். இன்னொன்று சொல்லப்பட்டது. இப்பொழுது கொடுத்திருப்பதில் சுமார் 40 கிராமங்கள்

தான் இருக்கிறது என்று. ஏன் அப்படி கொடுக்க வேண்டும்? இன்னும் பல கிராமங்களில் இம்மாதிரியான விவசாய முறை இருக்கிறதே, குறிப்பாக ஏன் இவைகளை சொல்லவேண்டும்? பொதுவாக ஜில்லா என்று சொல்லிவிட்டால் என்ன? அதைப்பற்றிய தகராறு வந்தால் கோர்ட் தீர்ப்பு கொடுக்கட்டுமே என்று சொன்னார்கள். கோர்ட்டின் மேல் அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால், இதற்கு முன்னால் எல்லாம் அவருக்கு கோர்ட்களில் நம்பிக்கை இருந்ததில்லை. கோர்ட்டுக்கு போக வேண்டுமென்று சொன்னால் ஏழை எளியவர்கள் எப்படி கோர்ட்டிற்கு போக முடியும்? அவர்கள் பணத்திற்கு எங்கு போவார்கள் என்று சொல்பவர், வேண்டுமானால் கோர்ட்டிற்கு போகலாமே என்று இப்பொழுது சொல்கிறார். அதுவரைக்கும், அவருக்கு ஒரு மனமாற்றம் ஏற்பட்டதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன்.

இன்னும் சில விஷயங்கள் சொல்லப்பட்டன. அட்வகேட் ஜெனரல் அவர்கள் கையேர்வாரம்தார்களும், மாட்டு ஏர் வாரம்தார்களும் டெனன்ட் என்கிற முறையில் வாதித்தார்கள் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் சொல்லப்படும் சமயத்தில் இந்த அரசாங்கம் இதையெல்லாம் பார்த்துக் கொள்ளக்கூடாதா என்று எல்லாம் சொல்லப்பட்டது. அப்போது தெரிந்திருந்தது அவ்வளவு தான். அதன் பின்னால் இதிலுள்ள வித்தியாசத்தை தெரிந்த பிற்பாடுதான் இதில் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்தது. சில காரியங்களில் பல நாட்கள் சென்ற பிறகு தான் சில வித்தியாசங்கள் தெரிகின்றன. அதன் மூலம் பல சிக்கல்களும் வருகின்றன. அதனால் தான் எல்லா வகைகளிலும் முடிவு செய்யக்கூடிய ஒரே சட்டமாக செய்ய முடிவதில்லை. எந்த நாட்டிலும் இவ்விதம் செய்ய முடியாது. அதனால் தான் "கேஸ் லா" எல்லாம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து என்னவெல்லாமோ கிளம்புகிறது. அதன் பின்னால் பல வியாக்கியானங்கள் எல்லாம் கிளம்புகின்றன. புதுபுதுப் பிரச்னைகள் எல்லாம் எழும்புகின்றன. ஆகவே இதில் பார்த்துத் தான் சட்டம் செய்ய முடியுமே தவிர ஒரே அடியாக ஒரு சட்டத்தை செய்து விட முடியாது. இப்போது இந்த சட்டத்தில் 43 கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த பில் ஆரம்பத்தில் கொண்டு வந்தபோது 20, 24 கிராமங்கள் தான் இதில் உட்பட்டிருந்தன. இப்போது 43 கிராமங்களாக பெருகியிருக்கின்றன. இன்னும் ஒன்று இரண்டு கிராமம் இந்த முறையில் இருக்கலாம். இதை கொள்கையளவில் நான் ஒத்துக்கொள்கிறேன். அதாவது இப்போது தெரிந்த வரையில் இவ்வளவு தான் இருக்கின்றன. மேலும் உண்மையிலேயே இந்த முறையில் வேறு ஏதாவது கிராமங்களில் இருந்தால் அந்த கிராமங்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று இதில் ஒரு ஷரத்து இருக்க வேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்தால் அதை ஒத்துக்கொள்வதற்கு எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை. இந்த திருத்தத்தையும் நாங்கள் கொண்டு வந்தால் இதிலும் நாங்கள் ஏதோ வேண்டுமென்றே இந்த திருத்தத்தையும் கொண்டு வந்திருக்கிறோம் என்று எதிர்க்கட்சியினர் சொல்வார்கள். ஆகவே உண்மையிலே இந்த முறை வேறு ஏதாவது கிராமங்களில் இருந்தால் அந்த கிராமங்களையும் இதோடு பின்னால் சேர்த்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் சில கிராமங்கள் இவ்விதம் இருக்கிறது என்றும் வட ஆற்காடு ஜில்லாவில் போளூர் பகுதியில் இந்த முறை இருக்கிறது என்றும் சொல்லப்பட்டது. இவ்விதம் வேட்டையாடிக் கொண்டு போனால் இந்த முறை சில சில இடங்களில் அங்கங்கே கொஞ்சம் கொஞ்சம் இருக்கும். இந்த 43 கிராமங்களுக்கு மாத்திரம் ஒரு சட்டம் கொண்டு வருவது நல்லதல்ல என்ற கருத்தையும் சிலர் சொன்னார்கள். இது வரை மாகாணம் பூராவுக்கும் தான் எல்லா சட்டங்களையும் செய்து வந்தோம். இந்த மசோதா குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் தான் செய்யப்பட வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதை

4-30 p.m.

நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். கல்டிவேட்டிங் டெனன்ட் இனத்தில் இவர்களை சேர்க்க முடியாது என்று ஒரு ஜட்ஜ்மெண்ட் வந்தது, அதன் பிற்பாடு இதைப்பற்றி பரிசீலிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த முறை அதிகமாக திருச்சி ஜில்லாவில் தான் இருந்து வருகிறது. இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டத்தை எடுத்துப் பார்த்தால் லாண்ட் லார்ட்ஷிப்பையே நாம் கட்டுப்படுத்தியிருக்கிறோம். அவர்களுக்கு இந்த சட்டம் ஒரு விதத்தில் விரோதமாகத் தான் இருக்கும். அதையெல்லாம் அரசாங்கம் பார்க்காமல் பெரும்பாலான மக்களுடைய நன்மைக்காக மற்றவர்களுடைய உரிமையை ஓரளவுக்கு கட்டுப் படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நியதி தீர்ப்பின் படி பார்த்தாலும் நாம் செய்திருப்பது நியாயமாகத் தான் இருக்கிறது. காலம் போகிற போக்கில் ஒருவருடைய உரிமையும் நாம் ரெஸ்ட்ரிக்ஷன் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த முறையில் தான் இந்த சீர்திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறோம். நியாய வாரச் சட்டம் கொண்டு வரும்போதும் பல நிபுணர்களிடத்தில் இதற்கு வேண்டிய ஆலோசனை கேட்கப்பட்டது. அதையும் யாயமாகத்தான் 60—40 என்ற விகிதத்தில் கொண்டு வரப்பட்டது. நிதல்லாமல் 5—95 என்ற முறையில், நிலச் சொந்தக்காரர்களுக்கு அபங்கும், விவசாயம் செய்கிறவர்களுக்கு 95 பங்கும் கொடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தால் எந்த கோர்ட்டும் அது செல்லுபடியாகாது என்று தான் சொல்லும். ஆகவே சட்டத்திற்கு உட்பட்டு நியாயமான வகையில் தான் நம்முடைய சட்டங்களை கொண்டு வரவேண்டியிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டும் வருகிறார்கள், செய்து கொண்டும் வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு அவ்விதம் எல்லாம் செய்ய முடியாது. ஜனநாயக திட்டத்தின் கீழ் நாம் ஓரளவுக்கு நியாயமாகவும் ஒழுங்காகவும்தான் காரியங்களை செய்ய முடியும். அதல்லாமல் ஏதோ ஒருவர் கூடுதலாக நிலம் வைத்திருக்கிறார், அவைகளை கொடுத்து விடுங்கள் அல்லது சுட்டுத் தள்ளிவிடுவோம் என்று சொல்ல முடியாது. நியாயத்திற்கு ஏற்றபடி ஓரளவுக்குத் தான் காரியங்களை செய்ய முடியுமே தவிர ஒரேயடியாக எல்லா காரியங்களையும் செய்து விட முடியாது. இதை பார்க்கப்போனால் இந்த அரசாங்கம் ஓரளவுக்கு தாராளமாகத் தான் செய்திருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். நமது அடுத்த ராஜ்யமாகிய ஆந்திராவை எடுத்துப்பார்ப்போமானால் அங்கு 50—50 என்று தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வேறு பல விஷயங்களைப் பற்றி சொல்லப்பட்டது. அவற்றையெல்லாம் ஷரத்து வாரியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி, எங்கு உண்மையாக இந்த முறை இருக்கிறதோ அதை இதில் சேர்த்துக்கொள்ளலாம். அதோடு இதில் நியாயமில்லாத முறையில் விஷயங்களை சொன்னால் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

SRI N. K. PALANISAMI : Sir, I move :

"In sub-clause (*b*), in lines 30 and 31, *for* the words 'or by payment . . . share and payment', *substitute* the words 'on contract basis'."

SRI M. JAGANNATHAN : I second the amendment.

29th October 1958]

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

"*Add* the following explanation at the end of sub-clause (*c*):

'*Explanation.*—Any engagement entered into by a kaiaeruvaramdar or mattuvaramdar with an intermediary lessee shall be deemed to be an engagement with the successor in right to such land, in case the lease agreement between the intermediary and the landowner is terminated.'"

"At the end of sub-clause (*d*), in line 3, *add* the following words 'or by payment of fixed quantity of paddy or by both such share and payment."

SRI A. GOVINDASAMY: I second the amendments.

SRI M. KALYANASUNDARAM: ஸார், என்னுடைய திருத்தத்தின் நோக்கம் என்ன வென்றால் இந்த இடைத்தரகர்கள் என்பதில் அவர்கள் கையேர்வாரம்தார்களாக இருந்தாலும் சரி, மாட்டேர்வாரம் தார்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இடைத்தரகர்கள் தங்களுடைய குத்தகை பத்திரத்தை ரத்து செய்து விட்டால் செல்லாது என்று ஹைக் கோர்டு தீர்ப்பு இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி விளக்கமாக சொல்லப் பட வேண்டும் என்பது தான் என் விருப்பம். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் சொல்லலாம், லாண்ட் ஓனர்ஸ் என்பதில் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது என்று. "லாண்ட் ஓனர்ஸ்" என்பதில் "'landowner' in relation to a kaiaeruvaramdar or mattuvaramdar means the owner of a land who has engaged the kaiaeruvaramdar or the mattuvaramdar and includes any person deriving any right from such owner in respect of that land." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் போதுமான விளக்கம் இருக்கிறது என்று வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் வாதாடலாம். ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால், நான் இதைப்பற்றி சில நிபுணர்களிடத்தில் கலந்து ஆலோசனை கேட்ட போது, இதில் இருக்கிற விளக்கம் போதாது என்பது தான். ஆகவே இதில் நான் கொடுத்திருக்கக்கூடிய "எக்ஸ்பிளனேஷன்" ஐயும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI: ஸார், ஏற்கனவே குத்தகைக்காரர்களாக இருந்தவர்கள் இப்போது கூலிக்காரர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, or by payment of a fixed quantity of paddy or by both share and payment என்று இருப்பதை எடுத்து விட்டு "on contract basis" என்று போட்டுக்கொள்ளவேண்டும் என்பது தான் என்னுடைய திருத்தம். அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 4-40 p.m.

SRI S. LAZAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது இரண்டாவது பிரிவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களில் கனம் கல்யாணசுந்தரம் அவர்களுடைய திருத்தத்தை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவரது திருத்தத்தைப் பொறுத்த வரையில், இந்தப் பிரிவிலே அது தேவையில்லை என்பதைப் பற்றி நான் சொல்லாமலேயே எல்லோருக்கும் விளங்கும். இந்த மசோதா இருக்கக் கூடிய முறையிலே அது போன்ற ஒரு அம்சம் இருக்கவேண்டிய அவசியமேயில்லை. ஏற்கனவேயே இந்தப் பகுதியை நன்றாக அமைத்திருக்கிறார்கள். ஆனால், குறிப்பாக கை ஏர் வாரம்தாரரைப் பற்றி கொடுத்திருக்கக் கூடிய வரையறுப்பிலே, நான் காலையிலே பேசியபோது எடுத்துக் காட்டியது போல, இப்போது இருக்கக் கூடிய வரையறுப்பின் பிரகாரம், ஒரு பண்ணையாள் கூலியாக நெல்லை வாங்குகிறான் என்பதை வைத்துக்கொண்டு நானும் ஒரு கை ஏர் வாரம்தாரர் என்று கை ஏர்

வாரம்தாரர்களுக்குரிய உரிமைகளைக் கேட்க முன் வர முடியும். காரணம், இதிலே விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது கை ஏர்வார் தாரம்தாரர் என்பவர், விளையக் கூடிய வெள்ளாமையிலே ஒரு பங்கை ஊதியமாகப் பெற்றாலும் சரி, அல்லது குறிப்பிட்டுள்ள அளவுள்ள நெல்லைப் பெற்றாலும் சரி, அல்லது அத்தகைய பங்கையும் நெல்லையும் பெற்றுக்கொண்டாலும் சரி, அவர்கள், இந்த மூன்று வகுப்பினருமே கை ஏர் வாரம்தாரர்களாக இருக்க முடியும் என்ற முறையிலே இந்த வரையறுப்பு அமைந்திருக்கிறது. அப்படிப் பார்த்தால் இந்தச் சட்டத்தின் நோக்கம் யார் யார் இது போன்ற விகித முறையிலே முன் காலத்திலிருந்து வேலை செய்து வந்திருக்கிறார்களோ அவர்கள் இந்த லாபத்தை அடைய வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பது தான். இது தான் அரசாங்கத்தின் கொள்கை. அதை விடுத்து, 40, 42 கிராமங்களில் இருக்கக் கூடிய அத்தனை பேரும் கை ஏர் வாரம்தாரர்கள் என்று கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் பேசியதைக் குறித்து நான் ஆச்சர்யப்படுகிறேன். ஒரு சில கிராமங்களில், அதிலும் குறிப்பாக அந்த சமயம் இருந்த சூழ்நிலையிலே, விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கு, விவசாயத்தில் நல்ல ஊக்கம் ஏற்படவேண்டுமென்று இது போன்ற ஒரு முறை கையாளப் பட்டது என்று நான் சொல்லவில்லை, சர்க்கார் பிரசுரித்திருக்கக் கூடிய கெஜட்டில் பார்த்தால் தெரியும். அந்த முறை இப்படி இருக்கும் போது, ஏற்கெனவே வீதாசார முறைப்படி பயிர்த்தொழில் செய்து வந்தவர்களுக்கு அரசாங்கம் சலுகை கொடுப்பது நியாயமாகும். இந்த ஜில்லாவில் ஒரு சில கிராமங்களில் தான் இந்த முறை கையாளப்பட்டிருக்கிறது. ஏனைய கிராமங்களைப் பொறுத்த வரையில் ஒரு கிராமத்தில் 500 ஏக்கர்கள் இருந்தால், அதிலே 40, 50 ஏக்கர்கள் அதிகப்படியாகப் போனால் 100 ஏக்கர்கள் தான் இந்த மாதிரி சாகுபடி முறையில் வருகின்றதே தவிர மீதி அத்தனை நிலங்களும் பண்ணையாட்களை வைத்துத் தான் சாகுபடி நடக்கிறது. அந்த முறையிலே இப்போது இருக்கக் கூடிய வரையறுப்பை அப்படியே ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு சொந்த சாகுபடி நிலமும் கண்டிப்பாக—சொந்த சாகுபடி என்று சொன்னால் பண்ணையாள் அமையத்தான் செய்வான்—இதன் கீழே வந்து விடும். இதிலே குறிப்பாக " fixed quantity of paddy " என்று இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு பண்ணையாளையும் கை ஏர் வாரம் தாரராக வரையறுக்க நேரிடும். ஆகயால் அந்தப் பகுதியை எடுத்து விட வேண்டும். அல்லது, அந்தப் பகுதி அப்படியே இருக்க வேண்டுமானால் " provided that this shall not apply to Pannaiyals or farm servants " என்று ஒரு திருத்தம் செய்ய வேண்டும். சர்க்காரே ஒரு திருத்தத்தைத் கொடுப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன். அரசாங்கமே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும். நான் ஒரு திருத்தம் கொடுத்திருந்தேன். அது வேறு ஒரு பிரிவுக்கான திருத்தமாக இருந்த காரணத்தினால் பிரேரேபிக்கவில்லை. இந்தத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வரும் என்ற நோக்கத்தோடு நான் இதை முற்றிலும் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக " லாண்ட் ஓனர் " விளக்கம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. குறிப்பாக மேலும் இதை விரிவுபடுத்தவேண்டுமென்று கனம் கல்யாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாட்டுவாரம்தாரரைப் பொறுத்த வரையில், விளக்கம் நல்ல முறையில் இப்போது அமைந்திருக்கிறது. இதிலே இருக்கக் கூடிய முறையிலே பார்க்கும்போது மாட்டு வாரம்தாரர் உழக் கூடிய வேலையோடு கூட மற்ற வேலைகளையும் கவனித்துக் கொள்ளலாம் என்று அமைந்திருக்கிறது.

இந்த வரையறுப்புகளைப் பரிசீலிக்கும்போது மற்றொன்றை கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த வரையறுப்பை ஏற்படுத்தினால் புதிய கை ஏர் வாரம்தாரர்களையும், மாட்டு வாரம்தாரர்களையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது நம்முடைய நோக்கமல்ல. ஏற்கனவே, பழக்கத்தில்

29th October 1958] [Sri S. Lazar]

இருக்கக் கூடிய அந்தப் பகுதிகளுக்கு மட்டும், அந்தப் பகுதிகளிலே குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டும் இந்தப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்படுகிறதேயொழிய, இந்த வரையறுப்பால் புதிய கை ஏர் வாரம்தாரர்களையும், மாட்டு வாரம்தாரர்களையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சர்க்காருடைய எண்ணமல்ல. ஆகவே அந்த முறையிலே பார்க்கும்போது, நல்ல முறையில் வரையறுப்புகள் அமையுமானால் உள்ளபடியே நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தக் கருத்துக்களை மனதில் கொண்டு அரசாங்கமே திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கை ஏர் வாரம்தாரர் யார் என்று நிர்ணயிக்கும்போது இந்த மசோதாவிலே ஒன்று விளைகிற விளைச்சலில் பங்கு பெறுகிறவர்கள், இல்லாவிட்டால் கூலியாக நெல்லைப் பெறுகிறவர், இல்லா விட்டால் பங்கு, நெல் இரண்டையுமே பெறுகிறவர் என்று போட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் லாஸர் அவர்கள் சொன்ன மாதிரி " payment of fixed quantity of paddy " என்று போட்டிருக்கிறார்கள். இப்படி போட்டிருப்பது பல பிரச்னைகளைக் கிளப்பி விடும் என்று நான் பொது விவாதத்திலே பேசியபோது குறிப்பிட்டுச் சொன்னேன். நான் அதையே மீண்டும் இப்போது சொல்ல விரும்புகிறேன். ஒருவன் தனியாக நிலத்தை சாகுபடி செய்யலாம். ஆனால் ஆட்கள் துணையில்லாமல் செய்ய முடியாது. பண்ணையாட்களை வைத்து கூலியை நெல்லாக அளந்து கொடுக்கிறார்கள். அவர்கள் சும்மாயிருந்தாலும், மத்தியில் இருப்பவர்கள் அவர்களைக் கிளப்பி விட்டு, அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, " நீயும் கை ஏர் வாரம்தாரர் தான் " என்று சொல்லி, நிலச்சுவாந்தார்களுக்குப் புதிய பிரச்னைகளை கிளப்பி விடலாம். இந்தச் சட்டமே 40 கிராமங்களுக்காகத்தான், அதிலும், அந்த கிராமங்களில் நெல்லைக் கூலியாகப் பெறுகிறவர்கள் இந்தக் கை ஏர் வாரம் தாரர்களில் மிக மிகக் குறைவு. அந்த சிறிய அளவுள்ள கை ஏர் வாரம்தாரர்களுக்காக இந்த முறையிலே அமைப்பது மீண்டும் புதிய பிரச்னைகளில் கொண்டு வந்து விடும். நிலச்சுவாந்தார்களுக்கோ, அல்லது கை ஏர் வாரம் தார்களுக்கோ நல்லது ஏற்படா விட்டாலும் வக்கீல்களுக்கு வேட்டைக் காடாக மாறி விடும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இதை எடுத்துக்கொண்டு நெல்லைக் கூலியாகக் கோறுகிறவர்கள் என்பதை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் வக்கீல்களுக்குத் தான் நல்ல பிழைப்பு ஏற்படும். சட்ட சபை அங்கத்தினர் என்ற காரணத்தினால் அந்தக் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் கை ஏர் வாரம்தாரர்கள் பெருகி விடுவார்கள். அவர்களுக்கு மத்தியிலுள்ளவர்கள் சும்மாவிடப்போவதில்லை. ஆகவே அரசாங்கம் நன்கு கவனம் செலுத்தி புதிய தொல்லைகளை வரவழைக்காமல், சங்கடங்களை உண்டு பண்ணமல் திருத்தம் கொண்டு வருவார்கள் என்று எண்ணுகிறேன். அதோடு மட்டுமல்லாமல் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தைப் பார்த்தால், நடுவிலே இருக்கிற குத்தகைதாரரோடு ஒரு கை ஏர் வாரம்தாரரோ அல்லது மாட்டு வாரம்தாரரோ ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருந்தால், அந்த ஒப்பந்தமானது பின்னர் நிலச்சுவாந்தராக இருப்பவரையும் கட்டுப்படுத்தும் என்ற விளக்கத்தைக் கொடுப்பதாகத்தானிருக்கிறது என்று நான் புரிந்துகொள்கிறேன். இப்பொழுது நிலச்சுவான்தார்களும், அவர்களிடம் நேரடியாக வேலை செய்யும் கை ஏர், மாட்டு வாரம் தார்களும் இந்தப் பிரச்னையை சமாளிப்பதற்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில், புதிதாக ஒரு குத்தகைதாரர் வர்க்கத்தையும் இதிலே இழுப்போமேயானால், அது சரியாக இருக்குமா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பிய காலத்திலும் கூட இந்தமாதிரி ஒரு பிரச்னை எழுப்பப்பட வில்லை. குத்தகைதாரரையும் இதிலே சேர்த்து, அவர் மாறினாலும், பின்னர் வருகிறவருக்கும், இந்த கை ஏர், மாட்டு வாரம்தாருக்கும் உறவு நீடிக்க

4-50 p.m.

[Srimathi T. N. Anandanayaki] [29th October 1958

வேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்திருப்பது சரியல்ல. மசோதா வில், நிலச்சுவான்தார் யார் என்று கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. அது அப்படியே இருந்தால் போது மானது. மேலும் ஒரு விளக்கத்தைக் கொடுத்து குழப்பத்தை கொண்டு வராமல் இருப்பதுதான் நல்லது. ஆகவே அரசாங்கம் இந்தத் திருத் தத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பார்களேயானால், மசோதாவில் புதிய தொல்லைகள் இல்லாமல் இருக்குமென்று நினைக்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினருடைய கோரிக்கை என்னவென்றால், ஸப் டெனன்ட் என்று சொல்லுகிறோமே, அந்த முறையில் இந்த சப்டெனண்டுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று இந்தத் திருத்தத்தின் மூலமாக கேட்கிறார். Cultivating Tenants Protection Act லேயும் இம்மாதிரி சப் டெனென்ட்டுக்கு பாதுகாப்பு அளிக்கும் விஷயத்தைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டி ருக்கிறோம். அந்த சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்தால், அந்தத் திருத்தம் இதற்கும் பொருந்தும். இதை நன்றாக பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால், கனம் அங்கத்தினர் கொண்டுவந்திருக் கும் திருத்தம் வேண்டியதில்லை என்று சொல்லிக்கொண்டு, அதை ஏற்றுக்கொள்ளவதற்கு இல்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாட்டு வாரம்தாருக்கு என்ன விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என் றால், மகசூலிலிருந்து ஒரு பங்கு ஊதியமாகப் பெறக்கூடியவராக இருக்க வேண்டும். மற்றப்படி பில்லுமொத்தமாகக் கொடுத்தால், ஒரு சாதா ரண casual labourer கூட இந்தக் கை ஏர் வாரம்தார் ஆகி விடுவார் என்று சொன்னார்கள். ஆனால் இந்த மாதிரி casual labour செய்பவர் கை ஏர் வாரம்தாராக ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படாது. கை ஏர் வாரம்தாருக்கு என்னென்ன வேலை என்று குறிப்பிடப்பட்டி ருக்கிறது. பில்லுமொத்தமாக ஊதியம் கொடுப்பதினாலே casual labourer ஆகிவிடமாட்டான். நாங்கள் விரிவாக விளக்கம் கொடுத் திருப்பதினாலே இந்த மாதிரி சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தெளிவாக யிருக்கவேண்டுமென்பதற்காகத்தான் கொடுத்திருக்கிறோம். "kaiaeruvaramdar" means any person engaged by a landowner to do ploughing and watering operation or ploughing operation alone on a land for remuneration for such work by a share in the crop on the land in respect of which such work is done or by payment of a fixed quantity of paddy or by both such share and payment என்றிருப்பதனால், இந்த விபரீதம் ஏற்பட்டது. ஆகவே, கனம் அங்கத்தி னருடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

The amendments were put and lost.

Clause 2 was put and carried.

Clause 3.

DEPUTY SPEAKER : The motion is—

'That clause 3 do stand part of the Bill'.

If any hon. Member wants to speak on the clause, he can speak.

SRI S. LAZAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது பிரிவிலே எந்த அளவுக்கு கை ஏர் வாரம்தாருக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும் பொழுது, அவர்களுக்கு ஒவ்வொரு சாகுபடி பருவகாலத்திலும், 2-வது ஷெடியூலில் சொல்லியிருக்கிற கூலியைக்கொடுக்கவேண்டுமென்ற முறையில் இந்தப் பிரிவு அமைந்திருக்கிறது. ஏற்கனவே, பல அங்கத்தினர்கள் எடுத்து

29th October 1958] [Sri S. Lazar]

சொன்னதுபோல், இதிலே ஏராளமாக கஷ்டங்கள் இருக்கின்றன. காரணம், இரண்டாவது ஷெட்யூல் பிரகாரம், நான்கு மாதங்களுக்குக் குறையாத ஒவ்வொரு சாகுபடி பருவகாலத்திற்கும் பிரதி மாதமும் 45 பட்டணம் படி நெல் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் அறுவடையான பிறகு கை ஏர் வாரம்தார்கள் வேலை செய்த நிலத்தின் நிகர மகசூலில் 7-ல் ஒரு பங்கு கொடுக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். சாதாரணமாக, ஒவ்வொரு நிலத்திலும், அதன் தரத்திற்குத் தகுந்தவாறு ஒன்று, இரண்டு, சில இடங்களிலே மூன்று போகம்கூட சாகுபடி நடந்து கொண்டு வருகிறது. இந்தத் சட்டப்படி பார்த்தால், முதல் சாகுபடிக்கு 4-மாத சம்பளமும், இரண்டாவது சாகுபடிக்கு 4-மாத சம்பளமும், மூன்றுவது சாகுபடிக்கு 4-மாத சம்பளமும், ஆக, வருஷம் பூராவும் பார்க்கும் பொழுது, 12-மாதச் சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இது தவிர, நிகர மகசூலில் 7-ல் ஒரு பங்கும் கொடுக்கவேண்டும். இதை நடைமுறையில் எந்த அளவுக்குக் கொண்டுவர முடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். குறிப்பாக, இப்பொழுது கார் சாகுபடியை எடுத்துக்கொண்டால், எந்த கார் சாகுபடியும் 90 நாட்களுக்கு மேல் நடக்காது. இது விவசாயம் செய்கிறவர்களுக்குத் தெரியும். கார் சாகுபடி செய்கிறவர்கள், இந்தச் சட்டத்தினுலே குறிப்பிட்டபடி நான்கு மாதச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சொன்னுல், எந்த மாதத்திலே ஆரம்பிப்பது, எந்த மாதத்திலே முடிப்பது என்ற கஷ்டம் ஏற்படும். ஒவ்வொரு சாகுபடியும் அறுவடையாகும்பொழுது, அவர்களுக்கு 7–ல் ஒரு பங்கு ஊதியம் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள நிலைமையை பார்ப்போமேயானுல், மாதம் பூராவும் வேலை செய்யக்கூடிய ஆளுக்கு சம்பளம் 1½ முதல் 2 கலம் வரையிலும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 45 படி கொண்ட நெல் ஒரு ஆளுக்கு தற்சமயம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனுல், இந்த கை ஏர் வாரம்தாரைப் பொறுத்த வரையில், சாதாரண பண்ணையாள் அல்லது கூலி ஆள் செய்யக்கூடிய சிக்கலான வேலையை அவர் செய்வது கிடையாது. பல அங்கத்தினர்கள் இதை ஒப்புக்கொண்டார்கள். கனம் அமைச்சர் அவர்களும் இதை நன்ருக எடுத்துச் சொன்னுர்கள். கை ஏர் வாரம்தாரரைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு சாகுபடி பருவகாலத்திலும் 6 அல்லது 7 நாட்கள் மட்டுமே வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. நிலத்தை உழுபவன் அல்லது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுபவனுக இருந்தால், அவன் கூட கை ஏர் வாரம் தாராக இருக்கமுடியும். இப்படி 6 அல்லது 7 நாட்கள் வேலை செய்பவனுக்கு மாதம் பூராவும் சம்பளம் கொடுக்கவேண்டும், ஒவ்வொரு சாகுபடி காலத்திற்கும் நான்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டும், அப்படி ஒரு வருஷத்திற்கு 12 மாதச் சம்பளம் கொடுக்கவேண்டும், இதைத் தவிர நிகர மகசூலில் 7-ல் ஒரு பங்கும் கொடுக்கவேண்டுமென்று சொன்னுல், எதையாவது மனதில் வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிருேமா என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது. ஆகவே, இதை நன்ருக பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தச் சபையும் இதை நன்ருக பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தச் சபையும் இதை நன்ருக பரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கிருேம். உள்ளபடியே கை ஏர் வாரம்தாரர்களுக்கு என்ன ஊதியத்தை நாம் கொடுக்கவேண்டும் என்பதை நாம் நிர்ணயிக்கவேண்டும். ஏற்கனவே பேசிய ஸ்ரீமதி அனந்த நாயகி அவர்கள் சொன்னதுபோல், இப்பொழுது அவர்கள் கேட்பது எல்லாம், அவர்களுக்கு வேண்டியது எல்லாம் பிக்ஸிடி ஆப் டென்யூர் அதாவது நிலத்தை விட்டு அனுவசியமாக வெளியேற்றப்படாமல் சாசுவதமாக பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதுதான். அதைவிட்டு, புறம்பாக . . .

DEPUTY SPEAKER: The hon. Member may continue his speech tomorrow since it is 5 o'clock now. The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.